கலா நிலயம்

V 3 · No. 36 · 11 Sep 1930

C

JL
ೠ211, N28 KY
N30' 3·36.
189120

௺70

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

8-NOV 1930

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஹு செப்டம்பர் மீ 11உ [No 36

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 701
2. அப்பர் (இரத்தினப் பரிட்சை)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 703
3. மாதவி மாதவம்.
பொ. இராமாநுஜன் 705
4. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) 707
5. கம்ப ராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 709
6. குறுந்தொகை (பாட்டு 156—167)
K. இராமரத்னம் ஐயர் B.A. 712
7. நம்மாழ்வார் வைபவம் (2-ம்பத்து—2-ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 715
8. வர்த்தமானம் 719

## கலாநிலயம்

189/20

### இதுவே யியற்கை.

முதலிடை கடையென மூன்றுபாகங்கள் எல்லாவற்றிற்கு முள. ஒரு கருமத்தின் தன்மையில் முதல் என்பது அதன் நோக்கமும், இடையென்பது அது நிகழுமாறும், கடையென்பது அதனாற்பெறும் பயனுமாம். நம்முடைய வாராய்ச்சிக்கு ஆளாயிருக்கின்ற இந்தத் தேர்தற்றொழிலின் இடைப்பாகத்தின் இலக்கணத்தை இதுகாறும் கூறிவந்தோம். இலக்கியங் கண்டதற்கே இலக்கணம்இயம்புதல் முறைமையென்னும் உண்மையிலிருந்து யாம் ஒருசிறிதும் விலகவில்லை. தற்காலம், நம்மின் அயலிலும் அகன்றும் சூழ்தரும் பற்பலநிகழ்ச்சிகளே இவ்வயின் யாம் உரைத்தவை யனைத்திற்கும் இலக்கியமாய் எழுந்து நிற்க,அவைகளைக் கண்டிருந்தும் அவைகளின்தன்மையை எண்ணிறந்தோர் உணராதிருப்பதொன்றே வியப்பன்றி இங்கு யாம் உரைத்தவைகளிலொன்றும் ஐயமேனும் இறும்பூதேனும் எழுப்புதற்குரியதன்று. இந்தத் தேர்தல்முறை இன்னபடி மானுட மதியையும் மானத்தையும் நல்லறத்தையும் கொன்றுதின்று கழியுமாயின் எஞ்சிய பயன் இவ்வகைத்து என்பதையே எடுத்துக் காட்டினேம். இவையனைத்தும் யாவரும் ஓடும் ஓட்டத்திலேயே காணக்கூடியவைகளாய்க் கிடக்கின்றனவாதலால் அவைதாம் கற்பனைகளாகாமை திண்ணம்.

தேர்தல்முறைகள் தலைவிரித்து ஆடுமிடமெல்லாம், அங்கு இங்கு அன்று இன்று எனுதபடி எங்கெங்கும், எந்நாளும் இப்புலையாம் புல்லிய வாழ்க்கையே எஞ்சுகின்றதென்பதை எந்தச் சரித்திரத்திலும் காணலாகின்றேம்.

ஜெர்மன்தேசத்துச் சரித்திரநூலாசிரியரொருவர், தற்காலத்தவர், முற்கால ஏதன்ஸ் நகர வாழ்க்கையைப்பற்றிப் பின்வருமாறு பேசுகின்றார்.

"The grandeur and loftiness of Attic democracy had vanished, while all the pernicious germs contained in it were fully developed. A life of comfort and a craving for amusement were encouraged in every way and the interests of the citizens were withdrawn from serious things. Conversation became more and more superficial and frivolous. Famous courtesans formed the chief topic of talk; the new inventions of Thearion, the leading pastry cook in Athens, were hailed with loud applause; and the witty sayings which had been uttered in gay circles were repeated about town as matters of prime importance."

இரண்டாயிர வருடங்களுக்குமுன் முற்றிலும் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளால் ஆளப்பெற்றது அவ்வேதன்ஸ் நகரம். இத்தகைய ஆட்சியால் அளவிலாப் பெரும் சிறப்புக்களடைந்து திகழ்ந்தது அதுவெனப் பகர்வார் பலர். சிறப்பும் செல்வமும் அதற்கிருந்தது உண்மையே; ஆனால் இப்பிரதிநிதியாட்சியே அச்சிறப்

பினிற்கும் செல்வத்திற்கும் காரணமாயிற்றென மயங்கலாகாது. உற்றுநோக்கின் வேறு சில காரணங்களால் விளைந்த அந்தச் சிறப்பினைச் செறியப்படர்ந்தழித்ததொரு களைபாய் நின்றது இத்தேர்தல் எனும் உண்மை புலப்படும். மேல் ஆங்கிலத்தில் வரைந்துள வாக்கியங்கள் இவ்வாறு இழிவடைந்த அந்நகரத்தை வருணிக்கின்றன. அதன்மொழிபெயர்ப்பு வருமாறு:-

ஏதன்ஸ்நகர ஜனநாயக வரசியலின் பேரும் பெருமையும் மறைந்துபோய்விடப் பிறகுஅதனிலிருந்த கொடிய விஷக்கிருமிகள் மாத்திரந்தான் வளத்துடன் எஞ்சினின்றன. சிற்றின்ப வாழ்க்கையும், களியாட்டத்தின்பால் ஒரு தீராத்தாகமும் ஜனங்களிடைப்பரவலாயின. பெரிய காரியங்களினிடம் நோக்கமே செல்லாது கழன்றகன்றது. அற்பச் சிறு பேச்சுகள்தான் மாந்தர் மனத்திற்கிசைந்ததாயின. பேரெடுத்த நாடகக் கணிகையர்களைப் பற்றித்தான் முதலாக எல்லோரும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளலாயினர். சமையற்காரனொருவன் புதிபதாகக் கண்டுபிடித்த பலகாரவகைகள் கரகோஷத்துடன் வரவேற்கப்படும். களியாட்டயர்வார் பயிலும் வேடிக்கைப் பேச்சுக்கள், நகரமெங்கும் பெரியதொரு விஷயங்களாகப் பேசப்படலாயின.

இந்நாள் நம்மிடையியங்கும் சில நகரசித்திரங்கள். இதனிற் பெரிதும் வேறாகா. பொதுஜனப்பிரதான முறையின் (Democracy) பயன் இதுவேயாயின் மானமுடையார் மாள்வதே மேல். தேர்தல்முறை ஆட்சியினால் தலைசிறந்ததென்று மதிக்கப்படும் அமெரிக்காவின் தன்மையும் இன்னதேயாய் இருந்திருக்கிறது. பிரான்ஸ்தேசத்தைச் சேர்ந்த ஒரு சரித்திரவாராய்ச்சி விற்பன்னர் டி. டாக்வில் (De Tocqueville) என்பவர் அமெரிக்க தேயத்தில் பலவாண்டுகள் தங்கியிருந்து, ஆட்சிமுறை குடிவாழ்க்கை மனைவாழ்க்கை அனைய யாவற்றொடும் பழகி நேரே கண்டறிந்து மொழிகின்ற வாக்கியம்ஒன்று இங்குக் காணலாம். அவர், அமெரிக்கா தேயத்திற்கு மாத்திரமேயன்றி அதுபோன்ற நோக்கமும் முறையும் உடைய எல்லாத் தேயங்களுக்கும் ஒக்குமாறு பொருப்பட உண்மைப் படுத்திப் பின்வருமாறு உரைக்கின்றனர்:—

The greater part of the men who constitute these (democratic) nations are extremely eager in the persuit of actual and physical gratifications. As they are always dissatisfied with the position which they occupy and are always free to leave it, they think of nothing but the means of changing their fortune or of increasing it. To minds, thus predisposed, every new method which leads by a shorter road to wealth, every machine which spares labour, every instrument which diminishes the cost of production, every discovery which facilitates pleasures or augments them seems to be the grandest effort of the human intellect. It is chiefly from these motives that a democratic people addicts itself to scientific persuits—that it understands and that it respects them. In Aristocratic ages, science is more particularly called upon to furnish gratification to the Mind; in Democracies to the Body.

[ஜனவாட்சி முறையுள்ள தேசங்களின் ஜனங்களில் அதிகமானவர்கள், சரீரசம்பந்தமானபோகங்களை நுகர்வதிலேயே பேரார்வ முடையவர்களாகி அதனை அடையும் பொருட்டே தம்முடையனைத்தையும் உய்ப்பவர்களா யிருக்கின்றனர். தாம் பெற்றுள ஒரு நிலைமையில் அவர்களுக்கு எப்பொழுதும் திருப்தி இருப்பதில்லை. விரும்பியபோது ஒரு பதவியை விட்டுவிடும் சுதந்திரமும் இருக்கின்றது; எனவே தங்களுடைய அந்தஸ்தையும், செல்வாக்கையும், மாற்றிக்கொள்ளும் வழிதேடுவதைப்பற்றி யல்லாது வேறொன்றையும் அவர்கள் நினைப்பதுமில்லை. இத்தகைய நோக்கத்தையுடைய மனத்திற்கு, பொருள்தேடக் குறுக்குவழிகாட்டும் ஒவ்வொரு முறையும், கைத்தொழிலில் குறைந்த வேலையில் அதிகப்பயன் தரவல்ல இயந்திரங்களும், குறைந்த செலவில் அதிகமான பொருள்களை ஆக்கவல்ல ஏற்பாடுகளும், மனிதனது அற்பசுகங்களை வளர்க்கவோ அதிகப்படுத்தவோவுள்ள சூழ்ச்சிகளும் தான், மனித முயற்சியால் ஆன பெரிய காரியங்களாகின்றன. முக்கியமாய் இந்த நோக்கத்தால்தான் ஜனநாயக மனப்பான்மையினரான ஜனங்கள் பூதசாஸ்திரஞானம் பெறுவதில் ஈடுபடுகின்றனர்; இதுதான் அவர்களுக்கு விளங்குகின்றது. இதற்காகவே அவர்கள் மதிப்பும் மதித்து மரியாதை அளிக்கின்றனர். சொத்துடைய சிலர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் மனத்திற்குரிய அவாவைத் தணிக்கச் சாஸ்திரஞானம் கருவியாயிருந்தது. இப்பொழுதோ எனின் உடலையே அது பற்றியிருக்கின்றது]

கைதவப் புணர்ப்பினாலும் ஏற்கின்ற இகழ்ச்சியோடும் நிகழ்கின்ற இத்தேர்தல்தொழிலின் இறுதியாய பயன், மானுடப் பெருமையெல்லாம் சிதைந்தழியும் ஒரு ஆன்மத்துரோகமேயாய் முடியுமாறு இவ்வாறு என்றக்கால் ஏதினி யியம்பல்வேண்டும். பண்டைநாள் வாசனையால் ஒன்றிரண்டு சொற்கள் ஆன்மாவை வலிந்தழைத்து இக்காலத்தில் நம் ஜனத்தலைவர்கள் வழங்குகின்றன வனைத்துமே வாய்மையென நம்பவேண்டா? இம்மாகாணப் பிரதமமந்திரியாயிருக்கின்ற டாக்டர் சுப்பராயன் இரண்டுவாரங்களுக்குமுன் நிகழ்த்திய சர்வகலாசாலைப் பட்டமளிப்புச் சொற்பொழிவில் தீண்டாமையைத் தகைவாராய்,

"நீங்கள் தத்துவநூல்கள் படித்திருக்கின்றீர்கள். ஒவ்வொரு மனிதனும் அவன்உயர்ந்த ஜாதியானாகட்டும், அல்லது தாழ்ந்த ஜாதியானாகட்டும், பெற்றிருக்கின்ற ஆன்மா ஒன்றேயென்று நூல்கள் கூறுகின்றன. அங்ஙனமிருக்க ஆதித்திராவிடர்களைத் தெருவில் நடக்கலாகாதென்றும் கோயிலிற்குள் போகலாகாதென்றும் தடுப்பது தர்மமாகுமா? எனவே மாணவர்களாகிய நீங்கள் பண்டைக்காலப் பழக்கவழக்கங்களின் கொடுமையினின்று விலகவேண்டும்"

என உரைபல பகராலுற்றார். என்னிது! அனைத்து ஆன்மாக்களும் ஒன்றேயென்று உணர்ந்தபின் நோயிலுக்கு வெளிநிற்கும் ஆன்மாவொன்று உள்ளிருக்கு மான்மாவோடு உயர்வுதாழ்வு நெடிதுகூறி இகல்வதற்கு இயையுமோ. மற்று, உள்ளிருக்கும் ஆன்மாதான் தன்னின் வேறில்லா வொரு ஆன்மாவை வெளியிலே விலக்க எண்ணுமோ. ஆன்ம உணர்வு இருக்குமாயின் ஒன்றும் அறையவேண்டா. அஃது இல்லையாயின் பயனல இயம்பலாய் முடியும். இத்தகைய வாசகங்களின் இரகசியத்தை உற்று நோக்குங்கால் யாக்கைக்குரிய வாய்ப்பாடுகளில் ஆன்மச் சொற்றொடர்களை முழங்க முயல்வதன் எளிமைபுலப்படும். தனக்கேனனப் பிரிநிலை ஏகாரம்பெய்து 'வோட்' முதலியன கேட்கும்போது ஆன்மாவனைத்தும் ஒன்றே என்ற உணர்வோ முந்திவந்துநிற்கின்றது! அஃதுடையார் இதனைச் செய்வதும் அதனைச் சொல்வதுமாய்ச் சுழலமாட்டார்.

நிகழ்வும் பயனும் இவைபாக இனி, இத்தேர்தல் முறை யாட்சியின் முதலாய கோட்பாடுகள் ஒன்றிரண்டை நோக்குங்கால் அவைகளும் அவலமேயாய் நிற்கின்ற பரிசினைப் பின்னர்ச் சிறிதாராய்ந்து தேர்ந்து கொள்வோம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

## 12. இரத்தினப் பரிட்சை.

[685-வது பக்கத்தொடர்ச்சி]

### (ii) இரத்தினங்களின் உற்பத்தி

நவரத்தினங்கள் எவ்வாறு பூமியில் விளைந்தனவென்பதற்குப் புராணக்கூற்று:—

வாசவன் வேள்விக் கிரங்கியோர் பசுவாய்
வந்திடும் வலனைவச் சிரத்தால்
ஆசற வரிந்த வுறுப்பினை வானோ
ரருந்தமண் விழுந்தன தப்பிக்
காசறு வித்தாய் மலையினுஞ் சிறந்த
கடலினுந் தீவினும் புதுமை
பேசரும் பெரிய நாட்டினும் பிறந்து
விளைந்தன பிறங்கிட வன்றே.

பரியவா னென்பு வயிர நீ டிறைச்சி
பவழமென் கருவிழி நீலம்
பொருவரு மொளிசேர் கவம்புரு டராகம்
பொருந்துசெங் குருதிமா ணிக்கம்
மருவிய மயிர்வை டூரிய நிணங்கோ
மேதக வாணகை முத்தம்
குருவளர் பித்து மரகத மென்று
கூறுவர் குலமணிப் பிறப்பே.

திருவாலவாயுடையார் - திருவிளையாடற் புராணம்.
[25-மாணிக்கம் விற்ற திருவிளையாடல் 9-10]

நவரத்தினங்கள் ஐந்திணையிலும் கடலினும் நதிகளினும் கண்டெடுக்கப்பட்டன வாயினும், * வயிரத்தின் பிறப்பு ஒருவகையென்றும், மரகதத்தின் பிறப்பு மற்றொருவகை யென்றும், முத்தின் பிறப்பு பின்னொருவகை என்றும், பவளக்கொடி வேறொரு பிறப்பென்றும் ஏனைய பஞ்சரத்தினங்களான, மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வைடூரியமென்னும் வேறுபட்ட ஐந்து வனப்பினையுடையன ஒரே முதலிற்றோன்றி வேறுபட்டன வென்றும் புலவர் கூறுவர்.

* "வயிரம்' வைராகர மேருப்
பொருப்பு இமவான் கூடர்
துங்கசவா லக்கமவங் திகமாதங்கர் தொகுமருண
மெனுமெட்டா கரமே தோற்றம்"
திருவாலவாயுடையார் - திருவிளையாடற் புராணம்.

இரசாயனவாதிகள் வயிரத்தை ஒருவகைக் கரி யென்பர். பற்பல யுகங்கள் பூமியில் அழுந்திக் கிடந்த கரியின் ஒருவகை வெளிவரின், அது ஒளி விடும் வயிரமாம். ஏனைய மாணிக்கக் கற்களும் அவ்வாறே என்பர். இதை ஒருவாறு குறிப்பிடுவதுபோல் விளங்கும் திருநாவுக்கரசின் பதிகம் காண்க:—

மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்டதொண்ட
பேணிக் கிடந்து பரவப் படுவன பேர்த்துமஃதே
மாணிக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே.
திருமாற்பேறு - திருவிருத்தம் 1.

மரகதத்தில் பழம்பச்சை யென்றும் புதுப்பச்சை யென்றும் தமிழகத்தில் இருவகை வழங்குவது நாமறிவோம். இக்காலத்தில் மாத்திரமன்றிப் பண்டைக் காலத்திலும் பழம்பச்சைக்கே அதிக மதிப்பும் விலையுமிருந்ததுபோலும். சிவபெருமானைப் பச்சைநிறமுடையர் என்னும் அப்பர் அவரைப் பழையரென்றழைப்பதையும், இம்மணியின் குணங்கள்போன்ற தன்மைகளிற் சில சிவபிரானிடமிருப்பதாக எடுத்துரைப்பதையும் சீர்தூக்குக:—

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
பழையர் பிழையெல்லாம் நீக்கி யாள்வர்
பச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனென்று கையேந்தி யில்லந் தோறும்
பிச்சைகொள நுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சைமிக வறிவர் என்று முள்ளார்
இடைமருது மேவிய ஈச னாரே.
திருவிடைமருது - திருத்தாண்டகம். 7.

மேல்நாட்டு ரசாயனவாதிகள் பச்சையைஇருவகைப் படுத்தி அவைகளின் மூலபேதத்தை அடியிற்கண்டவாறு காட்டுகின்றனர். "கீழ்நாட்டுப் பச்சை (oriental emerald)" என்பது கோரண்டம் என்னும் ஒருவகை அலூமினியம் ஆக்ஸைட் (Alumininm Oxide) என்றும், பெருவியன் பச்சை (Peruvian

Emerald is a transparent variety of beryl, coloured green by the oxide of chromium பெரில்என்னும் மண்ணில் உண்டாகும் பளிங்கு) அது கிரோமியக் களிம்பால் பச்சைநிறம் பெறும் என்றும் கூறுவர்.

மரகதம் (Oriental emerald) தமிழகத்திற் றொன்றுதொட்டுக் கொண்டாடப்பட்டது. இதனை ஒரு பாத்திரத்திலுள்ள பாலில் இடுவோமாஞல் பால் முற்றும் பச்சைநிறமாய் விளங்கும். இது "பாசார் மேனிப் பசுங்கதி ரொளிய" தெனச் சிலப்பதிகாரத் தில் புகழப்பட்டது. * உமாதேவியார் கலந்த † உருவு டைச் சிவபெருமானை ‡ அப்பர் வர்ணிப்பது காண்க:-

எந்தளிர் நீர்மைகோலமேனியென் றிமையோ ரேத்தப்
பைந்தளிர் கொம்பரன்ன டடர்கோடி பயிலப்பட்டுத்
தஞ்சடைத் தொத்தினூலும் தம்மதோர் நீர்மையாலும்
மந்தளி ராகம் போலும் வடிவரா ரூரனாரே.

திரு ஆரூர் - திருநேரிசை - 5.

மாணிக்கம் புருடராகம் நீலம் கோமேதகம் வயிடூ ரிய மென்னும் இவ்வைந்தும் பளிங்கில் $ உற்பத்தியா குமென்றும், குணங்களால் வேருகுமெனவும் முன் ஞேர் கூறுவர். மேல்நாட்டு ரசாயன ஆராய்ச்சியும் சற்றேறக்குறைய அம்முடிவையே காட்டுகின்றது. இவற்றைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி சுட்டித் தொகுப்பது காண்க:—

சுடர்கொள் மாணிக்கத் திறம்வகுப் பவரார்
சொல்லுவல் சுருங்கநான் கிடமும்
படருநால் வருணத் திலகிய பெயரும்
பன்னிரு குணமுமீ ரெட்டு
நெடியபுன் குறையுந் தருமெழு நான்கு
நிறங்களும் பிறங்கிய விலையும்
இடமுறு பத்தி பாய்தலு மென்ன
வெழுவகை யிலக்கண முடைத்தால்.
கருதிடின் வலவை மாவலி கங்கை
கம்பனை கல்லனை யென்னுந்
தருசம ஞெளிசூழ் நதிகளுன் கிடமாம்
சாதிநான் கந்தனன் வெள்ளை
பரிவுறு மரசன் சிவப்புவாழ் வணிகன்
பச்சைசூத் திரன்கறுப் பவைதா
மருவிய பெயர்கோ மளங்குரு விந்தம்
பதுமரா கம்பஞ மணியே!

திருவாலவாயுடையார் - திருவிளையாடற் புராணம்.
[25-மாணிக்கம் விற்ற திருவிளையாடல் 11-12]

முத்து, பற்பல இடங்களில் உற்பத்தியாகு மெனி னும் * சிப்பத்திலுண்டாகும் பாண்டியநாட்டு முத்த மே, சிறந்த நித்திலமென † ஆரியராலும் கொண்டா டப்பட்டதாம். அப்பர்காலத்தில் சோழநாட்டின் கடற் கரையில் பட்டினவர் கடலில் முத்து மூழ்கி யெடுப் பது வழக்கமாயிருந்தது.

திரைவாய்ப் பெருங்கடன் முத்தங்
குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக்
கழுமலத் துள்ளழுந்தும்
விரைவாய் நறுமலர் சூடிய
விண்ணவன் றன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறு
நந்தமை யாள்வனவே.

திருக்கழுமலம் - திருவிருத்தம் - 3.

பவளம் என்பது ‡ கடலிற் சிறு பூச்சுக்களாலாக்கப் படும் ஒருவகைக் கொடி. பவளப்பாறைகளும் பவளத் தீவுகளும் உளவெனினும், ரத்தினங்களில் ஒன்ருய் மதிக்கப்பட்டது கொடிப்பவளமே. இதையே தாமங் களாகவும், தூண்களாகவும், உலக்கைகளாகவும் பாண் டியதேசத்திற் செய்தாரெனப் பண்டைய நூல்களிற் காணலாம்.

வீதிகடோறும் வெண்கொடி யோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிக ளொளிதோன்
சாதிக ளாய பவளமு முத்துந் தாமங்கள் [றச்
ஆதி யாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.

திருவாரூர் - திருவாதிரைப்பதிகம் - 3.

* மரகதமணியொடு வயிரத்தைக் குயிற்றிய திண்ணைகள் முற்காலத் தமிழ்நாட்டில் விழாக்காலங்களில் அமைப்பர்:—

மங்கல நெடுங்கொடி வானுற வெடுத்து
மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்
பவளத் திரட்காற் பைம்பொன் வேதிகை

சிலப்பதிகாரம், இந்திரவிழவூ ரெடுத்தகாதை.

† மறம்பய மலேந்தவர் மதிற்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையோ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்.

சம்பந்தர்.

‡ வளர்பொறி யாமை புல்கி வளர்கோதைவைகி
வடிதோலு நூலும் வளரக்
கிளர்பொறி நாக மொன்று மிளிர்கின் றமார்பர்
கிளர்காடு நாடுமகிழ்வர்
நளிர்பொறி மஞ்ஞை யன்ன தளிர்போன்றசாய
லவடோன்று வாய்மை பெருகிக்
குளிர்பொறி வண்டு பாடு குழலா ளொருத்தி
யுளள்போல் குலாவி யுடனே.

அப்பர் - சிவனெனுமோசை 4.

$ (i) ஒருமைத் தோற்றத் தைவேறு வனப்பி
னிலங்கு கதிர்விடூஉ நலங்கெழு மணிகள்.

சிலப்பதிகாரம்.

(ii) சந்தமு மகிலொடு முகில்பொதிந் தலம்பி
தவிழ் கனமணியொடு மிதுபளிங் கிடறி
எந்துவெள் ளருவிக ளெழிறிகழ் சாரல்
இடைச்சுர மேவிய விவர்வண மென்னே.

சம்பந்தர்.

* எண்டருதே சிடையளவே விலேகோ டன்க
ணியைந்தவற்றி ஞெளிபரத்தல் பத்தி பாய்தல்
தண்டரளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பிற்
சங்கினின்மீ னின்றலையிற் றழைநெற் ருளில்
ஒண்டொடிமங் கையர்களத்தி லியானைக் கோட்டி
லுயர்கழையிற் காகவா கனர்திண் டோளிற்
கொண்டலிலிப் பியிலேனக் கொம்பி லிக்கிற்
கொக்கிலெனப் பகர்வியப் பிப்பி முத்தால்.

திருவாலவாயுடையார் - திருவிளையாடற்புராணம்.

† 'பொன்றிரண் டன்ன புரிசடை புரளப்
பொருகடற் பவளமொ டழனிறம் புரைய'

சம்பந்தர்.

‡ கௌடல்யர் அர்த்தசாஸ்திரத்திற் காணப்படும் நிதி களை நோக்குக.

புதிய பூவினைப் புண்ணிய நாதனை
நிதியை நீதியை நித்திலக் குன்றினைக்
கதியைக் கண்டங் கறுத்த கடவுளை
மதியை மைந்தனை நான்மறக் கிற்பனே.

மறக்கிற்பனே யென்னும் திருக்குறுந்தொகை 9.



# மாதவி மாதவம்

[687 - வது பக்கத் தொடர்ச்சி]

உயிர்கள் யாவும் நலம்பெற்று உய்யவேண்டி ஆண்டு தோறும், அயில்வேற் குலிசத் தண்ணல்விழா வயர்தல் அறிவோம். அவற்று ளொன்று, செயிர்தீர் செல்வி மாதவியார் தீராத்துயரால் நோவ, அவள் உயிரே யனையான்தனக் கிறுதிபுரிந்த சூழ்ச்சி கண் டோமே. அந்தோ, அந்த இந்திரன்றன் அணிவிழா மற் றிவ்வாண்டும் உற்று வந்ததே. அதனுல் நம் வள வர் கோமான்மகற் கிறுதி தந்ததும், மாதவி நல்லாள் மகள் மணிமேகலை துறவு கண்டதும், மற் றந்நகரைக் கடல்கொண்டதுவும் காண்பேமால்.

ஒருகோலோச்சி யிருநிலம்புரக்கும் திருமா வளவன் தேவர்கோற் கெடுக்குந் திருவிழா இவ்வாண்டும் சிறப் புற நிகழ்ந்தேறியது. எனினும் ஓர் பெருங்குறை அணி நகர் முழுதுந் தணியாது பரவிற்று. அஃது, வழக்கம் போல் அவ்விழாச்சிறப்பிலே மாதவி போந்து கூத்து நடித்துப் பலரையு மகிழ்வியாததோடு, அவள்மகள் அணிதிகழ் செல்வி மணிமேகலையும் அச்செயலிற் புகுந்திடா தகன்று நின்றதேயாகும். அதனுல், நல் லறிவுபெருப் புல்லோர் சிலர் "என்னே, நாடகக் கணி கையின் வீடுபெறு ஞானம்; வியப்பு வியப்பு; இவள் நடிக்குங் கூத்தினுளெல்லாம் இக்கூத்துப் பெருங் கூத்தே!" என்று எள்ளி நகையாடினர். இதனை யோர் ஏதுவாய்க் கொண்டு, மாதவி தோழிவயந்தமாலையைக் கூவி "நீ யுனது தோழியுறை விடமேவி, அவளிடத்தே ஊரலர் கூறி, அது நீங்க அவளை நம்மனைக்கழைத்து வா" என்றேவினள், "என் மகள் என் சொற்கேட்டு என்று என் வழி யொழுகுவள்" என எதிர்பார்த்திருந்த முதியவள் சித்திராபதி. மாதவி தோழியும் ஆதரம் பெருக மணிமேகலையொடு மாதவியிருந்த அணிமலர் மண்டபத்துள்ளே சென்ருள். ஆங்கே வாடிய மேனி யும்தாபதக்கோலமும்கொண்டுவீற்றிருந்தமாதவியைக் கண்டு உளம் வருந்தி "என்னுன்கிரட்டி யிருங்கலை பயின்ற புண்ணியச் செல்வி! புகார் நகரத்தே, நிகழ்ந்த தொன்றுண்டு, புகலக் கேண்மோ; இந்திர விழாவிற்கு நீயும் வாராது எம் அருமை மகள் மணிமேகலையையும் அவ் விழாச்சிறப்பைக் காணவொட்டாது நீ தடுத்துள் ளது ஊரார் பலரும் நகுதற் கேதுவாயிற்று. நற்றவம் புரிதல் நம்மனோர்க்கு, உற்றதன்றென் றுரைப்பா ரன் ஞேர்; அந்தோ அன்னுய்! அவர் தொகுபுரைக்கும் பண்பில் வாய்மொழி பகர்தலும்இழிவு!" என்றுவேண் டிய வியம்பி அவளைத் தன்வழி மாற்ற முயன்ருள். அதுகேட்ட மாதவி "தோழி, எந்தாய் முன்னர் இயம் பிய மொழியினும், விந்தை தருஉம் நின் சிறுமொழி யின்று! மானம் விற்று ஊனை வளர்ப்பதோ, நலமெனன மொழிந்தாய். நன்று உன் மாற்றம்! கற்பிற்சிறந்த கண் ணகியாரின், நலன் ஒருகணமும் நினையாது அந்தோ, எனது நலமே பெரிதெனக் கருதி, வாணுள் முழுதும் அம் மாபெரும் பத்தினிக்கு இடுக்கணை புரிந்து இழி தகவுற்ற, ஏழையேற்கு நீ இயம்புவதிதுவோ? இன் னும் எத்துணை நல்லார்க் கின்னல் எளியள் புரிதல் வேண்டும், சொல்வாய். இன்னார்க்கும் இனியனுய், இறந்தார்க்கும் இன் நீம்பால் குன்றுமல் பொழிந் திட்ட குன்ருய குணத்தினன், நாமஞ்சார் நமர்களுக்கு நயப்படுமொழினிதுரைத்துச் சேமஞ்சார் நன்னெறிக்குச் செல்லுமா றருளினவன் பொருளுரையைத் தேராது மருணெறியிற்புகுந்துழன்று, பட்டதுயர்போதுமினிப் படமுடியா தொருசிறிதும்; கண்ணகியார் திருப்புதல்வி கணிகையர் தீச்செயற்கிசைதல், ஒண்ணுமோ? நீ யவ் வாறெண்ணுதலுந் தவறன்றே? புண்ணியனுர் நன் னெறியிற் பொருந்தலன்றி உம் விருப்பிற்கு ஏற்ற வளல்லள் என எந்தாய்க்கும் மற்றவர்க்கும் எடுத்து ரைப்பாய்" என்றின்னவாறு தன் நிலையைத் தெளிவு படுத்தினள். ஆங்கவளுரைகேட் டரும்பெறல்மாமணி ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று, மையல் நெஞ்சமொடு கையற்றுப் பெயர்ந்தனள் கை கேயியின் தூய நெஞ்சத்தைக் கலக்குவித்த அவள் பெயரே தனக்குமொரு திருப்பெயராய்த் தாங்கியவிக் கூனியென்பாள்.

* * * *

மாதவிமகளும் மன்னர்குமரனும்.

வருந்திய சிந்தையளாய்க் கூனி பிரிந்து சென்ற பின்னர் அவளுக்கு மாதவி உரைத்த மறுமொழியால், அவள்மகள் மணிமேகலை தன திருபெருங்குரவர்க்கும் நேர்ந்த மிகப் பெருந்துயர் அகத்தே சுட, நெஞ்சழிந்து கண்ணீருகுத்து நின்ருள். அஃதுணர்ந்த மாதவி தன் மகள் துயரினை மாற்றநினைத்து, மணிமேகலையையும் அவள் தோழி சுதமதியையும் மலர்கொய்து வருமாறு உவவன மென்னும் மலர்வனத்திற் கனுப்பினள். மணிமேகலைமீது நெடுநாளாகத் தணியாக் காதல் கொண்டு, "என்று அவளைப் பெறுவேன்?" என இர வும் பகலும் ஒன்றே நினைவினனுய் வருந்தும், அந்நாட் டரசன் நெடுமுடிக்கிள்ளியின் செல்வமகன் உதய குமரன் என்னும் பெயரினன், மணிமேகலை மலர்வனம் சென்றதை யறிந்து, "இதுவே என் விருப்பிற் கேற்ற வமயம்" என ஆங்கே விரைந்து சென்ருன். உவ வனத்தே மலர்பறித்துநின்ற மணிமேகலை உதயகும ரன் தேரொலி கேட்டவுடன் சுதமதியை விளித்துத் "தோழி, நமது மன்னர்குமரன் என்மீது காதல்பூண் டுள்ளான் என்னுஞ்செய்தி முன்னொருபொழுது நான் செவிமடுத்துள்ளேன். இது அவனுடைய தேரொ லியே போலும்!" என்றனள். அதற்கவள் "செல்வி, அஞ்சேல். யானும் அஃதுணர்வேன்; இஃதவன் தேரொலியே யெனினும் நினக்கோர் காப்பிடம் ஈங் குளது. ஆதிமுதல்வன்பாதபீடிகையுள்ள இப்பளிங்கு மண்டபத்தே நீ புகுவாய். யான் மன்னகுமரற்குவேண் டியசொல்லி விடுப்பல்' என்ருள். அவளும் அவ்வாறே அம்மண்டபத்துட் சென்று மறைந்து நின்ருள். அவ் வளவில் அரசிளங்குமரன் ஆங்கடைந்து சுதமதிமட் டும் தனியே நிற்பதைக்கண்டு "சுதமதி, உன்திற மறி வேன்; உன்தலைவி மாதவ ருறைவிடம்நீத்து மலர்வனம் அடைந்தது எதனுல்? காதலின் திறனை உன் காரிகை யறிவளோ?" எனத் தன் காமக்கருத்தைப் புலப்படுத்தி நின்ருன். அதற்கவள், "இளமை நாணி முதுமை யெய்தி, உரைமுடிவு காட்டிய உரவோன் மருகற்கு, அறிவும் சால்பும் அரசியல் வழக்கும், செறிவளை மக ளிர்செப்பலுமுண்டோ? அனையதாயினும், யானொன்று

கிளப்பல், வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி. வினையின்வந்தது வினைக்கு விளைவாயது, புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது, மூத்துவிளியுடைய தீப்பிணியிருக்கை,...மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து, மிக்கோய், இதனைப் புறமறிப் பாராய்" என்று உடலின் இழிதகைமையை யெடுத்தியம்பி, தன் தலைவிமீது அவன் கொண்டுள்ள வேட்கையை மாற்ற முயன்றாள். இளவலோ "நீ கூறியன யாவும் யான் முன்னரே யறிவேன். எனினும், உன் ஆயிழையாள் எவ்வகையாள், எத்திறத்தாள்; அவளே எனக்கு வேண்டும்" என மீண்டும் வினவிநின்றான். "ஐய, என் தலைவி துறவுபூணற் கிசைவளன்றி, நும் விருப்பிற் கிசையாள்" என்றாள் சுதமதி. "நங்காய் நன்று நன்று நின் தோழியின் துறவு. அவளோ வருணக் காப்பிலள், பொருள்விலையாட்டி, நற்றவ வுணர்விலள்; அவட்குக் கற்பும் உண்டோ? சிறையும் இன்றே செழும்புனல் மிக்குழி? நிறையும் உண்டோ காமங் காழ்கொளின்? உன்தலைவியெத்திறத்தாளாயினும் யானவளைச் சித்திராபதியால் சேர்தல் உறுதி" எனக்கூறிச் சென்றான். அவன் சென்றதும் மணிமேகலை பளிங்கறையினின்று வெளிப்போந்து, தன்தோழியை விளித்து"மன்னகுமரன் கூறியதி யாது?" என வினவினள். அதற்கவள் நிழ்ந்தது கூறினள். "அன்னாய், அவன் அவ்வாறென்னை யிகழ்ந்து உரைத்தனன் என அறிந்தும், அவனையே தொடர்ந்து போனதென் னெஞ்சம். இதுவோ காமத்தியற்கையென்பது? ஆயின் அஃது அடியுடன் கெடுக" என்று தானே வினவும் விடையுமாக மொழிந்தாள் மாதவி பெற்ற மணிமேகலை நல்லாள்.

* * *

மணிமேகலா தெய்வம்.

அதுபொழுது வெய்யோன் பொன்னிறக் கதிர்களோச்சிக் குடகடலுள் மறைந்தான். துணையொடுகூடி மெய்ம்மறந்தமர்ந்த அன்னப் பேடுகளைச் சிறையிட்டாற் போன்று தம்மகத்தே தாங்கிய தாமரை மலர்கள் குவிந்தன. அஃதறிந்த சேவல்கள் குவிந்த அம்மலர்களைச் சிதைத்துத் தம்பெடையொடு அருகேயுள்ள தெங்கின்மட லேறின. அன்றிற்புட்கள் சென்றுவீழ் பொழுதைத் தம் சேவற்கிசைப்பன போற் கூவின. குவளை மேய்ந்த பசுக்கள் முலைபொழி தீம்பால் எழுதுக ளவிப்ப, கன்று நினைந்தழைக்குங் குரலவாய் அசைந்தசைந்து தம் மனை நோக்கிச் சென்றன. பைந்தொடி மகளிர் பலர் விளக்கேற்றினர். பாணர்கள் யாழிலே மருதநிலப் பண் பயின்றனர். கோவலர் வேய்ங்குழலில் முல்லைப்பண் பாடினர். அமரக மருங்கிற் கணவனையிழந்து, தமரகம் புகூவும் ஒருமகள் போல, கதிராற்றுப்படுத்த முதிராத்துன்பமொடு, அந்தியென்னும் பசலைமெய்யாட்டி, வந்திறுத்தனள். அவ்வமயம் மணிமேகலாதெய்வம் "மாதவிமகள் உதயகுமரனால் ஒருக்கால் மனம்வேறுபடினும் படுவள்" எனக்கருதித் துறவுநெறியிற் செலுத்த விரும்பி, சுதமதியும் அவள்தோழியும் அறிந்த ஒரு விஞ்சைமாதுபோல் வேடம்பூண்டு அம் மலர்வனம் போந்து, சுதமதி நல்லாள்தன் முகம்நோக்கி "ஈங்கு நின்றீர், என்னுற்றீர்?" என வினவினள். அதற்கவள் அரசகுமரன் கூறியதுரைத்தனள். "மகளே, அரசிளங்குமரன் ஆயிழைதன்மேல் கொண்டகாதல் சிறிதுந் தணிந்திலன். இஃது அறத்தோர் வனமென் றகன்றனனாயினும், புறத்தோர் வீதியிற் பொருந்துத லொழியான். ஆதலின் நீவிர் இன்றைய கங்குல் எவ்வகையச்சமுமின்றி, இப்பொழிலின் குடதிசைக்கண்ணதாகிய, அறவோருறையும் சக்கரவாளக் கோட்டத்தே தங்கிப் பொழுதுபுலர்ந்த பிற்றை நும்மனைக் கேகுமின்" எனத்தொடங்கி, அறஞ்செயலை வலியுறுத்தி, யாக்கை நிலையாமையை விரிவாகக் கூறினள். அவ்வளவில் இரவு நாழிகை பதினைந் தாயிற்று. நாழிகைக் கணக்கர் குறுநீர்க் கன்னலால் நாழிகையறிந்து இத்துணையெனக்கூறும் அரவமும்; நிறையளி யானையின் நெடுங்கூப்பாடும்; தேரோடும் பெருந்தெருக்கள் சிறியமுடுக்குவீதிகள் இவைகளிலே ஊர்க்காப்பாளர்எறிதுடியோதையும்; கள்ளுண்டு களித்தோர் வெள்ளைப்பாடலும்; வெண்சிறு கடுகு வேப்பிலை விரவிய தூமம் ஏந்திய தோழிகளோடு புதல்வரைப்பெற்ற புனிறுதீர் மகளிர் நீராடக் குளத்திற்குச் செல்லும் ஒலியும்; மறங்கொள் மாக்கள் தம் வேந்தற்குப் பகையாயினு ரில்லாதிருக்கவும், "எம் வேந்தன் கொற்றங் கொள்க" எனப் பூதசதுக்கத்து இடிக்குரன் முழக்கத் திடும் பலியோதையும்; ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப் பாலகர், கடுஞ்சூன் மகளிர் நெடும்புண் ணுற்றோர் தம்துயர் கெடுக்கும் மந்திரமாக்கள் "மன்றப் பேய்மகள், வந்து கைக்கொள்க" என நின்றெறி பலியின் நெடுங்குரல் ஓதையு மாக, அச்சந்தரும் பேரொலியே அந்த யாமத் தெங்கும் பரந்துநின்றது. சுதமதியும் மணிமேகலையும் அவ்விடத்திலேயே அயர்ந்து தூங்கினர். அஃதறிந்த அத்தெய்வமாது, தன்னைமறந்து துயிலும் மணிமேகலையைப் புகாரிற்குத் தென்திசைக்கண்ணே முப்பதுயோசனை தூரமுள்ள மணிபல்லவம் என்னும் தீவினில் அந்தரவழியே கொண்டுசேர்த்து, மீண்டும் உவவனம் போந்து, ஆங்கே தனித் துயிலுறாஉம் சுதமதியை யெழுப்பி, நிகழ்ந்ததுரைத்து, "அது கருதி வருந்தல் வேண்டா. அவட்கு நற்பயன் தருதற் பொருட்டே யா னிச்செயல் புரிந்தேன். இற்றைக்கு ஏழாவது நாளில் அவள் இந்நக ரடைவாள். அன்று பல புதுமைகள் நிகழும். அவள் தன்னுரு மறைத்து வாழினும், அதனை நும்மனோர்க் கொளியாள். இதனை அவள்தாய் மாதவிக்குங் கூறுவாய். அவள் என்திறமறிவாள். கோவலன் மகட்கு என் திருப்பெய ரிட்ட இடையிருள் யாமத்து, அவள் தாய்முன் தோன்றிக் 'காமன் கையறக் கடுநவை யறுக்கும், மாபெருந் தவக்கொடி யீன்றனை' யென்றே, நனவேபோலக் கனவகத் துரைத்தேன்; இதனையும் அவட்கு நினைவுறுத்துவாய்" எனக் கூறி மறைந்தாள். சுதமதி தன் தோழியின் பிரிவின்பொருட்டும், தான் தனித்து நிற்றற்கும் ஆற்றாது மனம்நடுங்கிக் கண்ணீருகுத்து, அம் மலர்ப்பொழில் நீங்கிச் சக்கரவாளக்கோட்டம் போந்து ஆங்கே உலக அறவியின் ஒருபுடைத் தங்கினள். காரிருள் சீத்துக் கதிரவன் முளைத்தபின்னர், ஏவுறு மஞ்ஞையின் இனைந்தடி வருந்த, மாதவி உறைவிடம் மேவி யவட்குப் போயகங்குலிற் புகுந்ததை யெல்லாம் வழுவிலா துரைத்தனள். அந்தோ! ஆங்கது கேட்ட அருந்தவச் செல்வி, நன்மணியிழந்த நாகம் போன்று, தன்மகள் வாராத் தனித்துய ருற்றாள்.



# தமிழ்ப் பாடம் 137.

[ 694-வது பக்கத் தொடர்ச்சி ]

## நைடதம்—நளன் தூதுப் படலம்

விழைவெனும் பாகெறிந் தமரர் விஞ்சையாந்
தழைமுக படாத்தமை தறுகண் வாரணம்
கழைமத னியற்றிய கருங்கண் மங்கைய
ரழகெனும் படுகுழி யாழ்ந்த தில்லையால். 38.

(உரை) விழைவு எனும் - ஆசை என்னும், பாகு - பாகனை, எறிந்து - தள்ளிவிட்டு, அமரர் - தேவர்கள் உபதேசம் செய்த, விஞ்சை ஆம் - மாலிகாஞ்சனம் என்னும் மந்திரமாகிய, தழை - தழைத்திருக்கின்ற, முகபடாத்து - முகமூடியினால், அமை - அமையப்பெற்ற, தறுகண் - அஞ்சாமையை உடைய, வாரணம் - யானையானது, கழை - கரும்புவில் தாங்கியிருக்கும், மதன் - மன்மதன், இயற்றிய - இயற்றிவைத்திருக்கும், கரும் கண் - கரிய கண்களை உடைய, மங்கையர் - மாதர்களின், அழகு எனும் - அழகு என்று சொல்லப்படும், படுகுழி - பள்ளத்தில், ஆழ்ந்தது இல்லை - விழுந்துவிடவில்லை.

விரிவுரை:— யானைபிடிப்பவர் பழகிய வொரு யானையின் துணைகொண்டு புதியயானையை வஞ்சித்தழைத்துவந்து, தோண்டி வைத்திருக்கும் படுகுழியில் வீழ்த்துவர். இப்பாட்டில் நளன் யானையாக உருவகம் செய்யப் பெற்றுளான். யானையைச் செலுத்துவதற்கான பாகன் இங்கு ஆசை. இங்கு நளனாகிய யானைக்குத் தேவர்கோ னருளிய மாலிகாஞ்சன மந்திரம் முகபடா மாயிற்று. ஆனால் இந்த யானை, வஞ்சித்து அழைத்துச் செல்லும் பாகனாகிய ஆசையை எறிந்துவிட்டது. ஆகவே காமன் அகழ்ந்துவைத்த மாதரார் அழகெனும் படுகுழியில் அத் தறுகண் வாரணம் வீழவில்லை. மங்கைமார் அழகினில் நளன் மயங்கிடாது, தன் கருமமே கருத்தாயினான் என்பது இப்பாட்டின் கருத்தாகும்.

---

விளங்கிழை யொருத்திபே ரணியில் வேந்தெழி
றுளங்கலு மதிசயந் தோன்ற நோக்கினாள்
வளங்கெழு புகழினான் மறையக் காண்கிலா
ளுளம்புகுந் தொளித்ததவ் வுருவென் றெண்ணினாள்.

(உரை) விளங்கு - பிரகாசம்பொருந்திய, இழை - ஆபரணத்தை அணிந்த, ஒருத்தி - ஒருமாது, பேர் - அணியில் - தனதுசிறந்த ஆபரணத்தில், வேந்து எழில் துளங்கலும் - நளனுடைய அழகிய உருவத்தின் நிழல் அசையக்கண்டு, அதிசயம் தோன்ற-ஆச்சரியமடைந்து நோக்கினாள் - (இவ்வுருவுடையவன் யாவன் என்று அறிய) பின்புறம் பார்த்தாள்; (ஆனால்) வளம்கெழு - வளமை பொருந்திய, புகழினான் - புகழை உடைய வனாகிய நளன், மறைய-(மந்திரவன்மையால்)மறைந்து போக, காண்கிலாள் - அவனைக் காணவில்லை. (காணப்படாது போகவே) அ உரு - அந்த உருவம், உளம் புகுந்து - தன் மனதிற்குள்சென்று, ஒளித்தது - ஒளிந்துக்கொண்டது, என்று எண்ணினாள் - என்று நினைத்தாள்.

விரிவுரை:—இச்செயுளிலும் இதனுடன் தொடர்புடைய பிற செய்யுளிலும் இக் கவிஞர்பெருமான் நம்முன் நிகழ்த்திக்காட்டுகின்ற இயங்குசித்திரங்களை ஊகித்துணர்வதற்கு மனோபாவம் சிறிது வேண்டும். இந்திரன் தந்த அம் மாலிகாஞ்சன மந்திரத்தை நளன் மனத்தகத்தே நினைத்திருக்கும்வரை அவன் உருக்கரந்திருப்பதும், அயர்ந்தானேல் வெளிப்படுவதும் ஆதல் வேண்டும். இங்குத் தமயந்தியின் நினைவாலோ மற்றச் சூழலின் எழிலினாலோ ஒவ்வோர்வேளை மந்திரமனனம் சோர்வது மாகலாம். விளங்கிழை இவட்குப் பின்னேவந்த நளன் மந்திரத்தை மறந்ததால் அவனுரு, தோன்றியிருத்தல் வேண்டும்; தோன்றிய அவனது வடிவின் நிழல்இவளது பேரணியில் துளங்கிற்று; தோன்றலும் அதுகண்ட அவள் அந்நிழற்படிவத்தின் அழகினிற்குத் தன் உள்ளத்தைக் கொள்ளைகொடுத்துவிட்டாளானாலும் "கன்னிக் காவலுடை இச்சூழலின் கண் என்னே ஓர் அரசச்செம்மல் வந்திட்ட" தெனும் அதிசயத்தினுடன் இந்நிழலிற்கு மூலமாய புருடன் எக்குமரன் என்றறிதற்காப் பின்புறம் திரும்பலானாள். இவ்வாறு இவள் திரும்புகின்ற முயற்சியினை நோக்கிய நளன் தன்னறிவு எய்தி மந்திரத்தினில் மீண்டும் மனத்தைச் செலுத்தியதால் அவனது உருவம் மறைந்துபோயிற்று. ஆதலின் திரும்பி நோக்கிய இவள் கண்களுக்கு யாதும் புலப்படவில்லை. எனின் வியப்பும் அயிர்ப்பும் உற்றவளாய் மீண்டும் அந்நிழல் உளதோ எனத் தன் அணியினுள் நோக்கினாள், அங்குமில்லை. பின் னிது என்னாயிற்றென்று ஆராய்வாளாகி முடிந்ததோர் முடிவை 'உளம் புகுந்தொளித்தது இவ்வுரு' வென்று அவள் எண்ணினாள் எனக் கவிகூறுகின்றார். நேராகவேனும் நிழலாகவேனும் ஒருமுறை கண்டக்கால் எந்நாளும் மறக்கலாகாப் பேரழகுடையவன் நளன். அப்பெண்ணின் மனத்துளே இப்பொழுது அவ்வுருவம் நீங்காமல் நிற்கின்றது. அணியின்பாற் கண்ட அவ்வுருவையே இப்பொழுது அவள் தன் உளத்துளே துளங்கக் காண்கிறாள். ஆதலின் முன் இழையினுள் விளங்கிய அவ்வுரு இப்பொழுது தன் இதயத்தே புகுந்தொளித்தது என்பது அவளுக்கு உறுதியாயிற்று.

---

உருவெளி யாகயான் கண்ட வொண்ணுதல்
மருமலர் மாலிகை வனைந்த தென்னென
வரசனு மெண்ணின னவளுஞ் சூட்டிய
தெரியல்காண் கிலனெனத் தெருமந் தாளரோ 40.

(உரை). உருவெளியாக - உருவெளித்தோற்றமாக, நான் - நான், கண்ட-பார்த்த, ஒள் நுதல் - பிரகாசம்பொருந்திய நெற்றியை உடைய தமயந்தி, (இப்பொழுது) மரு-வாசனை பொருந்திய, மலர்மாலிகை - மலர்மாலையை, வனைந்தது என் - தனக்குச் சூட்டியது என்ன காரணம், என - என்று, அரசனும் - நளமகாராஜனும், எண்ணினன் - எண்ணி வியந்தான். அவளும் - தமயந்தியும், சூட்டிய - தான் சூட்டின, தெரியல்—மாலையானது, காண்கிலன் - காணவில்லையே, என - என்று, தெருமந்தாள் - வியப்புடன் சிறிது கலங்கலானாள். (அரோ - அசை).

விரிவுரை:—கருத்துமுற்றத் தோய்ந்திருக்குங் காதலின் ஆர்வத்தால் நீங்காநினைவின் பயனாய உருவெளி

இருவருக்கும் இடைவிடாது தோன்றிக்கொண்டிருப்பது இயற்கை. முன்னோர்முறை உருவெளியைத் தமயந்தி என மயங்கி வெள்கியுள நளன், இங்குத் தமயந்தியை உருவெளியென்று மாறி மயங்கினான். மாலிகாஞ்சன மந்திரமும் அவன் மனத்தை விட்டகன்றது. உடனே தமயந்தி கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான். அன்னம் சொன்ன பேரெழில் நளனை உன்னஉன்ன முன்தோன்றும் உருவெளிக்கு மாலை சூட்டிச்சூட்டி மகிழ்வதும், ஆதாரமில்லாமையால் கீழேவிழு மாலையைக் கண்டிரங்குவதுமாய் இதுகாறும் பயின்றுள தமயந்தி இன்றும் உருவெளியென்று நினைத்துத் தன்முன் தோன்றிய நிடதவேந்தனுக்கு மாலையைச் சூட்டினாள். ஒருநாளுமில்லாத புதுமையாயின்று உருவெளித்தோற்றமேயாகிய இக்காதலி மாலையும் சூட்டுமோவென வியப்புடன் ஐயுற்று மந்திரத்தைநினைத்த மன்ன னுருவம் மறையலாயிற்று. மாலையும் அவனோடு மறைந்தது. உருவெளி மறைதற்குரியதே; ஆனால் உருவெளிக்குத் தான் சூட்டிய மாலை வீழாது நின்றதுமன்றி மறைவது மெங்ஙனம் எனத் தமயந்தி தயங்கலானாள். முன்னர் உருவெளியை மெய்யான தமயந்தியென்று மயங்கி, உரையாடவும் புக்க வேந்தன் தனக்கு மாலைசூட்டிய மெய்யான தமயந்தியை இப்பொழுது உருவெளியேயென்று கொண்டான். 'காதலர் பேதைமைஇன்னவாறு'என்று காட்டும் கவிவரர், நாம் பாடத்திற்கு எடுத்துக்கொண்டுள அடுத்த செய்யுளிலும் தொடர்ந்து அப்பேதைமை போந்தூரம் ஈதெனக் காட்டுகின்றார். உருவெளியை மெய்யென மயங்குகின்ற மயக்கவணி இலக்கியங்களில் உளது. ஆனால், மெய்யை உருவெளியென்று மயங்கும்படி செய்யும் இம் மயக்கவணி பொதுவற நிற்கின்றது.

---

முருகவிழ் குழலினா டனையு முன்னுறு
முருவெளி யெனவிறை யுவந்து புல்லினா
னரிவையு மன்னவா றெண்ணி யாங்கெதிர்
புரவலன் மார்புறப் புல்லி னாளரோ. 41.

(உரை). முருகு - தேனை, அவிழ் - சொரிகின்ற, குழலினாள் தனையும் - கூந்தலை உடைய தமயந்தியையும், இறை - மன்னவன், முன்உறும் - தன் முன்னே அடிக்கடி தோன்றலாகின்ற, உருவெளி யென - உருவெளித் தோற்றமென்று மதித்து, உவந்து - மகிழ்ச்சியுடன், புல்லினான் - அணைத்துத் தழுவினான்; அரிவையும் - தமயந்தியும், அன்னவாறு எண்ணி - நளன் மயங்கியதுபோலவே மெய்யான நளனை உருவெளி என்று எண்ணி, ஆங்கு - அவ்விடத்தில் தோன்றலான, புரவலன் - மன்னனது, மார்பு உற - மார்பிலே பொருந்த, எதிர் புல்லினாள் - அணைத்துக் கொண்டாள்.

விரிவுரை:—உருவெளியைப் புல்லினால் ஏதும் தவறில்லை என்ற நினைவில் இருவரும் துணிந்து புரிந்த தோர்விழைவின் திருவிழா விது. நளன், தானே நிஜம் தன்முன் தோன்றிய மங்கையோ பொய்த்தோற்றம் என்றெண்ணினான். தமயந்தியும் இப்படியே மதித்தனள். தழுவி யணைத்துத் தம்முள் மகிழ்ந்த மகிழ்ச்சியும் மெய்யே.

---

பொன்னடிப் பூஞ்சிலம் பொலிப்ப மேகலை
யின்னரிக் கிண்கிணி யிகலி யார்ப்பெழ
மின்னடை கற்பது போன்று மெல்லெனத்
தன்னமர் கோயிலுட் டைய லெய்தினாள். 42.

(உரை). பொன் - பொன்னால் ஆகிய, அடிப்பூம் சிலம்பு - அழகிய பாதச்சிலம்புகள், ஒலிப்ப - சப்திக்கவும், மேகலை- மேகலை என்னும் ஆபரணத்தில் கட்டியுள, இன் - இனிமையான சப்தம் தரும், அரி - பருக்கைக் கற்களை உடைய, கிண்கிணி - சதங்கைகள், இகலி - ஒன்றுடன் ஒன்று மோதுவதால் ஆர்ப்பு எழ - ஓசை செய்யவும், தையல் - தமயந்தி, மின்- மின்னலானது, நடை கற்பது போன்று - நடக்கப் பழகுவதுபோன்று, மெல்லென - மெதுவாக நடந்து, தன் - தனது, அமர் கோயில் - இருப்பிடமாகிய கன்னிமாடத்தை, எய்தினாள் - அடைந்தாள்.

விரிவுரை:—பொழிலின்கண் இவ்வண்ணம் சுவையுடைச் செய்திகள் சிற்சில நிகழ்ந்தபின் தமயந்தி தன்னுடைய மாளிகையை எய்தினாள். மின் நடை கற்பது போன்று,என்பது இல்பொருளுவமையணி.

---

மண்டமர் கடந்தவே னளன்வந் தானெனத்
தொண்டைவாய் மடந்தையர் நாளும் சொல்வன
பண்டரு மொழிக்கிளி பயின்று கூறலும்
கண்டதோ விஃதெனக் காளை யெண்ணினான். 43

(உரை) மண்டு - நெருங்குகின்ற, அமர்- போரை, கடந்த - கடந்ததான, வேல் நளன் - வேலாயுதத்தைத் தாங்கும் நளன், வந்தான் - வந்துவிட்டான், என - என்று, நாளும் - எப்பொழுதும், தொண்டைவாய் மடந்தையர் - கொவ்வைக்கனிபோன்ற சிவந்த வாயை உடைய மாதர், சொல்வன - சொல்லித் தமயந்தியைப் பரிகசிப்பதை, பண்தரு மொழிக்கிளி - இசையைத் தரும் சொல்லையுடைய கிளி, பயின்று - பழகி, கூறலும் - (நளன் வந்துவிட்டான்) என்று கூறவும், காளை - நளன், கண்டதோ இஃது - இது தன்னைக் கண்டுவிட்டதோ, என - என்று, எண்ணினான் - எண்ணலானான்.

விரிவுரை:—தமயந்தியைத் தொடர்ந்து நளனும் உடன்சென்று மாடத் துட்புற மடைந்தனன். அன்னம் நளனைப்பற்றித் தமயந்தியினிடம் உரைத்தவன்று தொட்டே, அவள்தோழியர் 'நளன் வந்துவிட்டான்' என்று கூறிக் குறும்புபுரிந்து வந்தனர்போலும். இச் சொற்களை வெகுநாள்களாகப் பயின்றுள கிளி, இன்று தமயந்தி கோயில்எய்தியதும், தோழியர் மொழியுமுன், 'வந்துவிட்டான் நளன்' என்று விரைந்து மொழிந்தது. கன்னிமாடச்செய்தி அறியா நளன் 'இக்கிளி தன்னைக் கண்டுவிட்டதோ' என்று ஐயுறவெய்தினான்.

உருக்கரந்திருந்த நளனை ஒருவருங் கண்டிலர். கிளியுங் கண்டிலது. ஆயினும் தோழியர் பரிகசமொழியைப் பயின்று கூறிய இக் கிளியின் மொழி இது இப்பொழுது உண்மையே. இவ்வண்ணம், உண்மையை ஓராமல் உரைக்கும்படி அமைகின்ற திறமையை 'ஓராதுரைத்தலணி' எனப் புனைந்தழைக்கலாமென முன்னர் இவ்விதழ்களில் கூறியிருப்பதையும், அதற்கு இச்செய்யுளை உதாரணமாய் எடுத்துக் காட்டியிருப்பதையும் இங்கு நினைவிற் கொள்ளலாம்.



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[697-வது பக்கத் தொடர்ச்சி]

சூழ்வினை யாழ்போருள் சோல்லி னாரரோ.

**வ**ரமிரண்டினில் ஒன்றினால் பரதனே பூமியைபாளப் பெற்றும் மற்றதால் இராமனை ஈரேழு பருவங்கள் கானகத்திடை போக்கியவத் 'தூமொழிமடமான்' கைகேயியின் கருத்துந் தூயதே என, சிறிது மேய்க்காத நுண்மதியோடு தம் சொல்லின் ஆற்றலையுஞ் செலுத்தி ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வாதிக்கின்ற பாகமும் படிப்பவர்தமக்கு நல்விருந்தாகுமென உன்னி ஈண்டுப் பெயர்த் தெழுதலாகின்றது. இனி வருவது அவருடைய உரை:—

அளியுறுத தூயசிந்தையள் அன்று இராமனைச் சேய்த்தாயவனஞ்செறிக்க எண்ணிய காரணம் இருதிறப்படுமென்று உணரலாகும் :— அறத்துறை நியதியும் அரசநீதியுமே தேவியை அத்துணிவுகொள்ளத் தூண்டியிருக்கவேண்டும். இராமன்பால் வைத்த பேராதரப் பிணிப்புண்டு அறமிறந்த வேந்தன், மீண்டும் தன் கழிபெருங்காதல் காரணமாக அல்லவை யாற்றுவாறு காத்து, அவன்மனதைப் புனிதநிலையில் நிறுவக் கற்புயர்கைகேயி கருதுவது இயல்பாம். துணைவன் தன் சொல்லறம் வழுவித் தன்னிலைநழுவக் காரணம், அவன் இராமனிடம்வைத்த அளவிகந்த அன்புமிகையென அறிந்தாள். அமிழ்தும் அளவிறந்தால் நஞ்சமாதலின், அரசனை அறநெகிழ்வித் தலைக்கும் அளப்பரும் மகவாசையைக் குறைத்து, மனத்தூய்மையேற்றி, அவா அகற்றி, அறம் ஆற்றச் செய்விப்பதற்குச் சிலகாலமேனும் இராமனினின்றும் அவனைப் பிரித்துவைத்தல் இன்றியமையாததெனக் கண்டாள். அத் தநயன் தன்னருகி லுள்ளவரை தசரதனுள்ள முழுதும் அவனுடைமையாகி நிற்கும். அதனால் அறநேமத் துறையமர்ந்து, அவன்மனம் தவாத்தருமத்தில் நிலைத்திறுகத் தடைப்படும். ஆகவே இராமநேசபாசத்தை நெகிழ்வித்தாலன்றி இறைவனை அறநெறியில் நிறுவ இயலாதாகும். தன் உளம்விழுங்கி, தவாநிறைக் காதல் வழிபாட்டுக்குத் தனியுரிய தசரதன் கடவுட்படிவம் தருமநிலை தவிர்ந்து மாசுறக்கண்ட மெல்லியலாள், அல்லாந்து, நெஞ்சழிந்து அவலத்தால் மாழ்கி, மனமறுகி, நைந்து நொந்ததை முன் குறித்துள்ளேன். தன்னகமகலா மன்னனை எனைத்தானும் மாசகற்றிப் புனிதனுக்குவதையே தெய்வக்கற்புடைய தேவியின் ஆவி அவாவுமென்பதில் விந்தையும் சந்தேகமும் இல்லையன்றே. அதனாற் றன் கணவன்கருத்து அறத்துறையில் நிலைப்பதற்கு இடையூறாய் நிற்கும் இராமனைத் தசரதனைப் போலவே தானும் அன்புசெய்பவளாயினும், தலைவன் நலம் விரும்பித் தணக்கத் துணிவாள். அவன் பிரிவால் அரசன் பெரிதும் பரிதாபப்படுவனென்று அறிவாள். தநயன்காதல் காரணமாகத்தவறுவந்ததலைவன் அவலப்படுவனென்று அஞ்சிவாளாவிருப்பின் வேந்தன் மிகைவிழைவின் விபரீதவிளைவு முளையிற்கிள்ளா முதிர் முள்மரம்போற் 'களைகையு மயலும் காய்த்தபின் அடர்க்கு' மாகலின், அவன் பிழைவிழைவிற் கைகேயி கண்ணோட்டம் கடியலானாள். மகன் பிரிவாற்று மன்னன் வருத்தம், தவறுடையவனிடைத் தகவுறுதவமாய், முன் துனிவிளைப்பினும் பின் பயன் பெரிதுதவும் பெற்றியை நினைத்து அதிற் றுணிவுகொண்டாள். மகனிடைக் காதல்மிகுவதன் பயனுத் தகுதிமறந்து தன் அறமிறந்த தன் தலைவன்மனத்தைச் "சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீஇ—நன்றின்பா லுய்ப்ப தறிவு" எனக்கண்ட கைகேயி,அவனை அறவழிப்படுத்தத் தான் செயற்பால தோர்ந்து தேர்ந்தாள். தான் அறமாக் கண்டதனை முட்டின்றி முடிப்பதில், "நெடுநீர் மறவி மடி துயில் நான்கும்" கடிநீராளா கையால், கைகேயி காண்டொறும் காதலன் கருத்தழியக் காரணமாய் நின்ற இராமனைத் தன் கணவன் காணுதகற்றத் துணிந்துநின்றாள். "ஊழிபெயரினும் தான் பெயராள்", "சான்றாண்மைக்கு ஆழியெனப் படுவாள்" ஆய பெருமகள், வேந்தன்பாற் றான் கொளற்குரிய வரமிரண்டில், ஒன்றாற் பிறந்துரிய பரதனுக்கு அரசும், மற்றதனால் மன்னனுக்கு அவன் கழிபெருங்காதற் றிருமகனின் பிரிவும் அறங்கருதி வேண்டுந்திறத் துரவுகொண்டாள்.

இராமனைப் பிரிக்கவேண்டினும்,கானகமுய்க்கக் கைகேயி கருதுவானேன்? என்பார்க்கும் விடைகாண்பாம். தசரதனை செல்லுமிடத்து எங்கு அவன் இருப்பினும், தசரதன் தானறியாமல் தநயனைத் தருவிக்கவும் தருமங்கருதாமல் அவனை அயோத்திக்கு அரசனுக்கவும் வினைபல விழைந்து சூழ்வான். தசரதன் சொல்லறச் சோர்வும் கள்ளக்கபட உள்ளக்கரவும் கண்கூடாக்கண்ட பின்னர், தலைவி அவனை நம்பாமை தவறாமா? கைகேயி தான்பயந்த மகனைக்கொண்டு தன்கையிற்றானே வளர்த்த இராமனின்குணம் நன்கறிவாள். கோதுடைய குரிசில்மனமும் வினையும் மாசு நீங்கித் தூய்மைபெற்று அறத்துறையில் நிலைத்திறுக வேண்டுவதோ ரவதி, இராமனை விரதமேற்கொண்டு வனம்வசிக்க வகையறிந்து வழிப்படுத்திற் பின் அவனைப் பேதித்து விரதம்விடச் செய்யவல்லார் உலகில் இல்லை யென்றும், இராமனைப் பிரிந்து நாளடைவிற் சபலம் நீங்கித் திருந்திய தசரதன்மனம் அறத்துறையில் நிலைப்பதாகுமென்றும் தெரிவாள். கொற்றவனை அதுபற்றி மற்றவரம் இதுவாக வழங்கக் கேட்டாள். அவ்வாறு சம்மதித்து வரங்கொடுத்த பின்னும், தசரதனும் கோசலையும் இராமனை வனம்போகவேண்டாமற்றடுத்து இருத்தமுயலுவதும், அறம் துறவாப் பெருந்திறலான இராமன் அவர்விருப்பத்தை மறுத்து, அறத்துறையறிவுறுத்தித் தான் குறித்தபடி வனம் வசிக்கும் விரதமேற்கொண் டொழுகுவதும், கைகேயியின் உரவுணர்ச்சியை உறுதிப்படுத்தி நிற்கும். இவ்விமரிசைகளைக் கீழே விரித்துள்ளபடியால் ஈண்டும் விரியாது விடுகின்றேன்.

இனி, இவ்வறத்துறை முறையேயுமன்றி, அரசியலவசியமும் இராமனை வனம்போக்கக் கைகேயிக்குக் காரணம் காட்டும். இதனை முதலிற் கூனியே அவளுக்குக் குறிக்கலாயினள். "இராமன் பதினான்குவருஷம் ஆரண்யம்போய்விடுவானாகில், பிரஜைகளனைவரும் பரதனிடம் பற்றுள்ளவர்களாகிவிடுவார்கள். அதன்பின் பரதனை இந்த இராஜ்யத்திலிருந்து ஒருவராலும் அசைக்கமுடியாது" என்று கோப்பெருந்தேவிக்குக் கூனி இவ் விறைமையிய லவசியத்தை ஞாபகப்படுத்திக் கூறி வைத்ததாக வான்மீகர்விதந்தோதியுள்ளார். இவ்வரசியலறத் துறையும் ஈண்டு அதன் பயன்முறையும் சிறிதுஆராய்வாம்.

குறிக்கப்பட்ட இராமாபிஷேகம் நிறுத்தப்படப்போகின்றது. அவ்வபிஷேகம் பரதனுக்குச் செய்யத்துணியப்படுகின்றது. இவ்வாக்க மாறுபாட்டுக்கு முழுமுதற் காரணமாகும் சுல்கச்சூன் வரலாறு முற்றும் மறையினும் ஓம்பி மறைக்கப்படவேண்டுமெனத் தன் கணவன் நலங்கருதும் தெய்வக் கற்பினாள் தீர்மானித்துவிடுகின்றாள். இவ்வுண்மை யுணராத கிளைஞரும் குடிகளும் என்ன கருதுவர்? "கேகயர்க் கிறை திருமகள்" வரன்முறை திரும்பித் தன் மகனலம் விரும்பி இறைமையாக்கம் பரதனுக்காக்க வலிந்து அதை யபகரித்து அவனுக்கு உபகரிப்பதாகவே அனைவரும் எண்ண நேருமன்றோ ? அவ்வாறெண்ணின் விளைவு என்னும் ? தங்கள் விசேஷ மதிப்பிற்கும் அன்பிற்கும்

பாத்திரமாகாத ஒரு கோமகனுரிமையை அவனுக்கில்லாது பறித்து உரிமையற்ற மற்றோர்மகன் வலிதிற்கொண்டாலே குடிகள் அதை வெறுப்பது இயல்பாகும். நொதுமல் நிலையுடைய குடிகளே வெறுப்பாராயின், இராமனுக்கு உற்ற சுற்றத்தினரும் நண்பினரும் அவனபிஷேகத்தை நிறுத்தி அதைப் பரதனுக்குப் பண்ணத்துணிந்ததை எண்ணி மனம் புண்ணுகிக் கவலாதொழிவரோ? இது நிற்க; இராமனே இளமையும் எழிலும் இன்புறுத்தும் பிறநலம் பலவும் படைத்த பருவத்திருமகன். தசரதன் தன் காதற் சூழ்ச்சிக்குத் துணைகருதி இவனைத் தன் படைகளும் குடிகளும் பழகி நயக்கும்படி பரதனில்லாதபோது அரசியற்றுறைபுகுத்தி அணிமையாலும் நெருக்கத்தாலும் யாவரும் நேசிக்கச் செய்துள்ளான். பரதனே பாட்டனூரிற் பலகாலும் உறைவதால் அயோத்தியாரின் அன்புவளர்க்க அவகாசமில்லாதவனுனன். அதனோடு மூத்தவனுக்குரிய அரசாக்கத்தை முறைமையிகந்து பறிப்பவனுகக் கருதவும்படுவான். இயலுரிமையும் அயற்றுணையு முடையனுகக் கருதப்படும் இராமன் கைகேயிகொடுமையால் உரிமைபறிக்கப்படுவதாயும், வரன்முறை மரபழித்து உரிமையும் சார்பும் இல்லாத பரதன் அரசை வலிதிற் கொள்வதாயும் ஒக்கலும் பக்கலும் உறவினரும் ஊராரும் கருதுங்கால், இராமன் நட்பினர் மனம்புழுங்கிப் பரதனழிவு சூழாதொழியார். போதிய நியாயம் சொல்லாமல், புகையும் பகையவித்தல் ஒல்லாதாம். தந்தையைக் கொன்று பரதனுக்குப் பரிந்துவரும் பலரையும் பொருதழித்துத் தமயனுக்குத் தானே முடிசூட்டப்போவதாய்க் கூசாது பேசிய இலக்குவன் போர்முழக்கம் அறிந்த பின்னும், பரதன் முடிசூட்டு இடையூறின்றி நிறைவேறுமென்று எண்ண நியாயமுண்டோ? நட்பினர் வெகுண்டெழுந்தால் உண்மையுணராத ஊரவர் பெரும்பாலும் இராமன் சார்பினரைச்சேர்ந்து படைகோலுவது இயல்பாமன்றோ? பரதனுட்சிக்கு மாருக அவ்வாறு ஊறும் பகைப்படைக்கு விதேகநாட்டுச் சேனையும் துணையாகும். ஏனெனில் ஜனகனும் கேகயனும் ஜன்மசத்துருக்கள். "காதலுன் பெருங் கணவனை யஞ்சி, அக்சனிவாய்ச் சீதைதாதை உன்றுதையைத் தெறுகிலன், இராமன் மாதுலன் அவன்" என்றார் கம்பரும். முன்னரே குலப்பகைபூண்டுள்ள மிதிலை மன்னன் தன் மருகனுக்கில்லாது அரசைக் கேகயன்பேரன் அடைவதாயும், அதுபற்றி இராமன்சார்பினர் மாறுகொண்டு மலையப்போவதாயும் அறிவானுயின், அவர்க்கு அவன் அவசியம் படைத்துணையனுப்பத் தாழானன்றோ?

இன்னும் தொல்லைச் சுல்கச்சூளைச் சொல்லாமல் பிறப்பால் இராமனே இறைமைக்குரியனென யாவரும் எண்ணும்படிசெய்வித்ததோடும் அமையாமல் அவனுக்குத் துணையும் பெருக்கச்சூழ்ந்து வினைமுடித்த மன்னனே ஊரிலில்லாத பரதன் பக்கத்தவர் யாரேனும் பண்டைவரலாறறிந்து தடுப்பிற் கலாம்விளையுமென்று அஞ்சி, இராமனைப் படையுடைநட்பினர் புடைசூழ்ந்து காத்தல் கடன் எனவிரும்பிப் பணித்ததுணரும் நாம், கைகேயி அரசன்பால் வரம்கேட்டு வஞ்சித்துஉடைமைபறிக்கப் பரிபவப்படுபவனுகப் பலராலுங் கருதப்படும் இராமன்பாற் பரிவுடையார் பகையஞ்சி அதுதகையும் வழிதேடுவது இயல்பன்றென்போமோ? "கொள்ளான் நின்சேய் இவ்வரசு; அன்னுன் கொண்டாலும் நள்ளாது இந்த நானிலம்" என்று, நாட்டவர் பரதனுட்சியை ஏற்கமாட்டாமையை மன்னவனே மனைவிக்கு வற்புறுத்துகின்றான். 'பரதனுட்சியைக் கொள்ளாது உலகம்' என வசிட்டனும் அதனையே வலியுறுத்திநின்றான். "நின் மெய்ம்முறை நீத்த நெஞ்சம் மையிற்காரியாளெதிர் நின்னை நன் மௌலி சூட்டல்...கருதித் தடைசெய்குநர் தேவரேனும்... சுடுவான் துணிந்தேன்" என்று இலக்குவன்வாயால் இராமன் நட்பினர் சீற்றமும் துணிவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. "என்னையும் இராமனையும் இலக்குவனையும்விட்டுப் பரதன் உன்னுடன்கூடி, நகரையும் நாட்டையும் பந்துக்களையும் மற்ற அனைவரையும் கொன்றுவிட்டுச் சந்தோஷமாக அரசு செய்யட்டும்" என்று தசரதன்வாயிலும், "வையமையல் தோன்று நெறிவாழ் துணைத்தம்பியை (பரதனை)ப் போர் தொலைத்தோ" என்று இராமன் வாயிலும், "இராமன் வனத்தகலப் பகையற்றதான நாட்டை நீ அடையலுற்றாய்" எனப் பரதனிடம் பேசும் கோசலைவாயிலும் எழும் வாக்கியங்களின் குறிப்பறியவேண்டும்.

பரதன் முடிசூட இராமன் அண்மையிலிருப்பின் போர் விளையும் என்பது இவற்றாற் போதருமன்றோ? ஒக்கலும் பக்கலும் பரதன் முடிசூடலைப் பொறாது மலையும். அனைவரையும் பொருதழித்தாலன்றிப் பரதனுக்கு ஆட்சி அமைவதன்றுமென விதந்து கூறப்பட்டுள்ள உண்மையை மறக்கொணுது. இவ்வாறு தான் தடுத்து இராமாபிஷேகம் நிறுத்தப்படுவதால் விளையும் கலகமும் கேடும் கைகேயி விரும்புவதன்றே. அத்தீமை விளையாது காத்துப் பரதன் பிறப்புரிமையான அரசாட்சியை நிலைபெற நிறுத்தநினைக்கும் தேவி, இவ்விபரீத விளைவனைத்தும் இராமனை நாடகற்றினன்றித் தடுப்பரிதென நினைப்பது இயல்பாமன்றோ? இராமனை முன்னிட்டுப் பகையாவார் பலரும் இராமன் இல்வழித் தண்டெடார். அவன் அணித்திருப்பின் அவன் சார்பினர் ஊக்கத்தோடு உறுபகைக்கு இறுதிகாண்பர். மூளக்கும் பகை துணைகொண்டு தழையுங்கால், கடும்போரும் கொடுங் கேடும் நாட்டுக்கும் நாட்டவருக்கும் உண்டாம். அதைத் தடுப்பதற்கு ஒன்று இராமனே முடிசூடவேண்டும். அன்றேல் உண்மையை வெளிபடுத்தித் தீரவேண்டிவரும். இவ்விரு முடிபும் கைகேயிக்கு உகந்ததில்லை. இராமாபிஷேகத்தால் இறைவன் அறம்பொய்த்து அழியநேரும்; உண்மை வெளிப்பாட்டால் அவன் புகழ் பொன்றிப் பழி தழைவதாகும். அவனறமும் புகழும் பேணிப் பாவமும் பழியும் விலக்கவிரும்பியே உண்மையை அறவே மறைத்து வரத்தை வற்புறுத்தி அறம்நிறுவத் துணிந்த தாயகற்பினளுக்கு இவ்விரு முடிவும் பொறுமையுடன் கருதத்தகுவதாமோ? கணவன் பழியஞ்சி உண்மையை ஒளிக்கவும் தீவிளைவை வெறுத்து அஞ்சி வெம்போர் விலக்கவும் துணிந்த தேவி, இராமனைச் சிலகாலம் சேட்படுத்துவதன்றி நாதனறத்தொடு நாட்டின் நலம் ஓம்பப் பிறிதுவழி காணுமல் அதைத் துணிகின்றாள். துணிந்தபின் தன் கருமம் முடிக்க விரைகின்றாள். இராமன் ஊரகலத் தாழுமாயின் ஒருவேளை பரதனே மீள நேரும். "பரதன் தமயனிடத்தில் பக்தியுடையவன். அவன் வரும்வரையில் இராமன் இங்கிருப்பானுயின் இவனை அவன் நாடகலவொட்டான்? அப்பொழுது எண்ணித் துணிந்த கருமம் சபலமாகாது வீண்போவதுடன் விலக்க விரும்பிய தீமைகளும் விளையலாகும்" என்று எண்ணினவளாய், இராமனை "நீ வனமேகத் தாழ்ப்பது உசிதமன்றெனத் தோன்றுவதால் உடனே போகவேண்டும்" எனத் தூண்டுவாளாயினள்.

இராமனிலும் 'நிறைகுணத்தவ'னுய பரதன் அறமனைத்தும் நிறம்பினுனுகையால் இடையூறின்றி முடிசூடப்பெறுவனுகில், அவன் தண்ணளியாலும் செங்கோன் முறையாலும் அவனுட்சி நிலையினைப் பெறுவதாகும். நிலைத்தபின் தீவிளைவு யாண்டும் யாவருக்கும் இலதாகும். பரதன் அரசுக்கு இராமன் பகையாகான். "பிறர் தூண்டுதலும் வேண்டுதலுமின்றி என்தம்பியாகிய பரதனுக்குநாட்டையேனும் சகல சம்பத்தையுமேனும்என்பிராணனையேனும் சீதையையேனும் சம்பூர்ண சந்தோஷத்துடன் கொடுப்பேன். அப்படியிருக்கத் தந்தையும் தாயுமே சொல்லும்போது கொடுக்கத் தாழ்ப்பேனே?" என்று வான்மீகர் இராமன் வாயால் அவன் ஸஹோதரவாத்ஸல்யத்தையும் பெற்றோர்பால் அன்பையும் வற்புறுத்தியுள்ளார். "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனே—என் பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்று கம்பரும் இதனையே வலியுறுத்து



கின்றார். ஆகவே, பரதனுட்சிக்கு இராமனுல் எவ்வித இடையூறும் ஏற்படாது. இராமன் அறிந்து தடுக்குமுன் அவன் பற்றுடைச்சார்பினர் பகைத்து மலைவதையும், பரதன் பெருமை தெரியாத நாட்டினர் அப்பகைதழுவக் கேடுவிளைவதையுமே கைகேயி அஞ்சுகின்றாள். அதனுல், பரதனுட்சியால் ஆக்கமும் வளமும் பெருகி அனைவரும் அவனுட்சியின் நலத்தையும் அறத்தையும் கண்டு அமையும்வரை இராமன் நாடகன்றிருத்தல் அரசியன் முறையில் அவசியமாக்கொண்ட கைகேயி, இராமனை "நீ போய்த்...தாங் கருந்தவ மேற்கொண்டு...கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி எழிரண்டாண்டில் வா' என்று இயம்பினள்." இராமனை என்றும் அயோத்தியை அணுகாது அகன்றிருக்கத் தூண்டிலள். நாடு அமைதிபெற்றுப் பரதனுட்சியின் ஆக்கத்தை அறிந்து அனுபவிக்குங்குடிகள் அவனை வாழ்த்தி யடங்கப் போதியகாலம் இராமனை நாடு கடந்திருக்கவே வேண்டுகின்றாள். மிதிலையன்ன பிறமன்னர் பதியிற்போயிருப்பின், அவன் பற்றுடையார் அவனை மீட்க விரும்பிக் கலாம்விளைப்பர். அதுபற்றி அவனைச் சிலகாலம் தவமேற்கொண்டு நீர்த்துறைநளாடிக் காடுறையவும் பிறகு திரும்பவும் உரைக்கின்றாள்.

இனி, வனவாசத்துக்கு ஆண்டு பதினுன்கென வரையறுப்பானேன்? எனின்,—இராகவன் நட்பினர் வளர்க்கும் பகை தளர்ந்துமாயப் புகைமனத்தவர் புழுக்கமாறி நாடும் 'பங்கமில் குணத்தோன்' செங்கோலாட்சியும் அமைதிபெறப் போதியதோர் காலம் வேண்டும். குறைபடின் விலக்கவிரும்பும் தீவிளைவுகள் மூளக்கலாகும். அவசியத்துக்குமேல் இராமன்நாடு தணத்தலை வீணே நெடிது நீட்டுவதும் வேண்டிலள். எண் எதுவும் எதுபற்றியும் தனிப்புனிதமும் பொருளும் உடையதில்லை. போதியகாலத்துக்குத் தக்க ஏதாவதோ ரெண் குறிப்பிடப்படவேண்டும். பதினுன்கன்றிப் பிறிதெண் குறிப்பினும் இவ்வினு எழக்கூடுமென்றோ? எதற்கும் உண்மை விடையாவது, எண்ணித் துணிந்தபடி அரசன் சொல்லறம் ஓம்பற்குரியவினையும் அதன்விளைவும் ஆய்ந்து முடிப்பதே தேவி கருத்தாகலின், அதற்கு அவள் அவசியமெனக்கருதிய காலம் பதினுன்காண்டா மென்பதேயாம். அரசியலவசியத்திற்கு வேண்டுமளவு இராமனைச் சேணிடையகற்றிவைக்க விரும்பினதல்லால், இராமனுக்கு வேறு ஏதமெதுவுங் கருதினவளில்லை. அன்றிக் கொடுமையொன்றே கருத்தாயின், கைகேயி என்றும் இராமன் அயோத்திரா டணுகாவண்ணம் வரம் கேட்டிருக்கலாமே? அப்படிக்கேளாமல் "நீ போய் எழிரண்டாண்டில் வா" எனத் தேவி விதந்து கூறுவதால், கேவலம் கொடுமை நயப்பாலேனும் இராமன்பால் வன்கண்மையாலேனும் அவனுக்கு வனவாசம் தர விரும்பினுளல்லள் என்பதும், 'சுல்க' அறத்தாற் பரதனுக்குரிய அரசு அவன்பால் ஊறின்றி நிலைத்து அது சம்பந்தமான வேந்தன் சொல்லறம் சோர்ந்தழியாது பாதுகாக்கப்பட அரசியன் முறையில் அவசியத்துறையாகமட்டுமே மன்னன்மனையாள் அவன் வனம்போவதை மனங் கொண்டாளென்பதும் பொதுநோக்குவார்க்கெல்லாம் இனிது போதரும்.

இன்னும், இராமனே இவ் வரசியற்றுறை யவசியமுறையுணர்ந்தொழுகியவனுகவும் அறியலாகும். கரவற்ற கைகேயிக்கு அரசன் வரமளித்தபடி வனமேக விடைவேண்டிய இராமனை, தசரதன் முதலில் "தன் வரத்தைப் பொய்யாக்கிவிட்டு அயோத்திக்கு அரசனுகி" ஆளும்படி தூண்டினுன். அதற்கு இராமன் உடன்படாமையால், அவனைப்பின் ஏகாந்தத்தில் அழைத்து "அன்று ஒருநாள் அரண்மனையில்நின்று பிற்றைநாட் போகலாம்" எனக் கொற்றவன் கூறலாயினன். அதனையும் உள்ளங்கொள்ளாது அறமறிந்த பெருமகன் பேசியது இது:—"இன்றே நல்க யாராலாகும்? ஆகையால் இங்கு இனி இறையளவும் நில்லாது ஒல்லையே நான் வனத்துக்கு வழிக்கொள்வேன்," எனச்சொல்லி வேந்தன் விருப்பத்தை மறுப்பதானுன். பின்னும் தந்தை சலனப்படுவதுகண்ட பெருந்தகை, "வனவாசத்தில் நிலைத்த என் துணிவை இனி மாற்றமுடியாது. ஆகையால் தாங்கள் தந்துள்ள வரத்தைச் சலனப்படாமல் ஸந்தோஷமாக முடித்து வைக்கத் திருவுளங்கொள்க." என எடுத்துரைத்துப் பின்னும் தன்னை எனைத்தானும்இருக்கவேண்டற் கிடமின்றி வரையறுத்து வற்புறுத்தினுன். தந்தையுள்ளமும் தம்பி இலக்குவனுதியரான தன் பற்றுடையோர்தம் கருத்தும் இயல்பும் நன்குணர்ந்த இராகவன், அயோத்தியில் தான் இனித் தங்குவது தரும கரும விரோத விளைவுகளுக்குக் காரணமாவதற்கு அஞ்சித் தன்பொருட்டு ஏதம் யாதும் யாராலும் எழாவாறு தடுக்கவும், தான் இனித் தாழாது விரைந்து அகன்று விலகிக் கலாமெதுவும் உண்டாகாமற் காக்கும் நலமறிந்து அதனை நாட்டுக்குக் கொடுக்கவும் நயந்து எண்ணி இது துணிந்தான் என்பதன்றி, அவனது இச்சொற்களுக்கும் துணிவுக்கும் பிறிதுபொருள் காணற்கில்லை. ஒருதினம்தங்கி மறுநாட்போகும்படி தன்னைத்தனியழைத்து வேண்டிய தசரதன் பெருவிருப்பையும் தந்தைசொற்கடவாதமைந்தன், அன்று மறுத்த தறுகண்மைக்குத் தக்க காரணம், தன்பொருட்டு எழுவதாகும் கலக விபரீத விளைவுகளை முன்னுணர்ந்து அவன் அவற்றைத் தடுக்கவிரும்பியதன்றி வேறு எதுவாகக்கூடும்? தாழாது உடனே தான் போவதாலாம் நன்மையாகஅவன்கருதியதுதன்பொருட்டாம் கலகம் தவிர்ப்பதன்றிப் பிறிதென்ன? காவலன் கரவற்ற கருத்தனுகில், கைகேயியை விலக்கி இராமனைத் தனியழைத்து இது கூறுவது ஏனே? இனி இவ்வாறு தன் அறத்துணிவுகூறி இராமன் விடைகொண்டபிறகும், மன்னவன் மறுபடியும் மனம்பற்றிச்சொல்லிய மாற்றமொன்றும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதாகும். "இராமனுடன்செல்லச் சதுரங்கங்கள் நிறைந்த சைனியங்களைத் தயாரித்தனுப்பும்படி" தசரதன் சுமந்திரனுக்குச் சொன்னுன். அரசு அகற்றப்பெற்று ஆரணியம்புகும் இராமனிலைக்கு அழுங்கிப்புழுங்கும் அவன் பற்றுடையாரைப் படைத்துணையும் உடையராக்கும் வேந்தன் விருப்பத்தைக்கேட்ட கைகேயி, விளைவஞ்சி நடுங்கி மறுத்துப்பேசினுள். அதற்கு மன்னவன், "நீ வரம் கேட்டபோது 'வனத்துக்கு இராமனுடன் பிறர் போகப்படாது' என்று கேளாத" தால் அவனுடன் படையனுப்புதற்கு இடையில்லாது அடங்குதி—என்று கோபித்துப் பேசித் தன் மனக்கோள்நிறுவச் சொல்லளவில் வாதம் தொடுத்து அவளை வெல்லமுயன்றான். தான் எண்ணித் தடுக்கமுயன்ற விபரீதத்தை வேந்தன் விளைக்க விழைவது கண்டு, கைகேயி உளமுளைந்து குரல்குன்றிக் குலைவதானுள். இவரிருவர்தங் குறிப்பும் அறிந்து இராமன், வனத்தில் வசிக்கும் தனக்குப் படை பரிவாரங்கள் பயன்படாமை கூறிய தோடமையாது, அரசியலைப்பரதனுக்கு அளித்தபிறகுஅதன் ஓர் அங்கமான சேனையையும் அவனுக்கு உதவாமற் பிறித்துத் தன்னுடன் அனுப்பவிரும்பிய தந்தையின் தகவிலெண்ணத்தைச் சுட்டி, "யானையைக்கொடுத்து அதன் கழுத்துக் கச்சையை மறுப்பது முறையும் பயனும் அற்றது" எனவினயத்துடன் எடுத்துவிளக்கி விலக்கினுன். இவைபலவற்றானும் இராமன் அகலச்செல்லாது அருகிருப்பின் பரதன் முடிசூடலுக்கு ஏற்படும் பகைப்பயமும் அதனை அறவே அகற்றுவதற்கு இராமனைச் சேட்படுத்தி வனஞ்செறிப்பதன் அவசியமும் கைகேயி கருதியது பிழையெனக்கொள்ளுதற்கு இடமில்லாமை தெளிவாகும்."

திங்களி னங் கலைகளென்ன ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார்சொரிந்த இச்சோர்விலாச் சொற்பொழிவையும் முன் பரதனுக்குக் கைகேசி அரசினைப் பெற்றுத் தந்த பரிசின் திறத்தினைப்பற்றி உரைத்தவைகளையும் ஆர்வமொடு உட்கொண்டு யாவரும் மிக மகிழ்வாராவது திண்ணம். ஆயினும், அழகுடைய இக்காரணங்களின் அமைதிக்கோ வேர்வரை சென்றுகல்லு மிடையூறொன் றுளது. அஃதியாதெனா இனிப்பகரப்படும்.

# குறுந்தொகை

[693-வது பக்கத் தொடர்ச்சி]

பாண்டியனேனாதி நெடுங்கண்ணனார் } 156 [குறிஞ்சி

*கட்டுரை கழறிய கற்றறி பாங்கனுக்குத் தன்துயரெடுத்துத் தலைமகன் கூறியது.*

பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே,
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே,
எழுதாக் கற்பி னின்செய லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ, மயலோ விதுவே.

(உரை). பட்டையையுரித்த பலாசங்கழியாலாகிய கோலோடு(உறியிலே) தாழப்பிடித்த நீர்க்கமண்டலத்தையும் உடைய, பட்டினியிருந்து பின்னுண்ணும் விருதத்தோடு கூடிய அந்தணனே, எனது மனக்கலக்கமோ இவ்வளவினதாயிருக்கின்றது;(இத்துணைத்தென்று)எழுதமுடியாதகல்வி வாய்ந்த நினது சாமர்த்தியச் செயல்களுள், பிரிந்தவர்களைக் கூட்டுவிக்குஞ் சத்திவாய்ந்தமருந்தும் உளதோ? (உளதாயின் அம்மருந்தால் அவளை மீட்டும் என்னுடன் கூட்டுவித்து எனது துயரத்தைப் போக்குவாயாக.)

செம்பூமுருக்கு-முள்முருக்கு, பலாசமரம்; இதன் கழியே துறவிகள் ஏந்துந்தண்டாதற் குரியது. கமண்டலம் - துறவிகள் கைக்கொண்டு செல்லும் நீர்க்கரகம், அல்லது பாத்திரம்; இதனை உறியில் வைத்துக்கொண்டு போதல் மரபு. இவையிரண்டும் சந்நியாசிகளுக்கன்றி பிரமசரிய நிலையினராகிய பார்ப்பனச்சிறுவர்க்கும் உரியவாம்.

உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை அந்தணீர்.
(கலித்தொகை - 9)

என்றார் பிறரும். இவர்களைச் 'சிமிலிக்கரண்டையர்' (சிமிலி - உறி, கரண்டை - கமண்டலம்.) என்றார் மணிமேகலையில். படிவம் - விரதம். 'பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே, என்று பன்முறைப் பாங்கனை விளித்தது, அவன் அந்தணனாதலின் எவர்மாட்டும் செந்தண்மை பூண்டொழுகுதல் அவனது அறமென உணர்த்துவதற்கு. எழுதாக்கற்பு - எழுதாத மறைக்கல்வி. 'எழுதாக் கற்பின் இன்செயல் உள்ளும்' எனப்பிரித்து, 'பிறரால் அளவிட்டெழுத வொண்ணாத கற்பிற்சிறந்த தலைமகளின்(இயற்கைக் கூட்டக்காலத்திலும், இடந்தலைப்பட்டுக்கூடிய ஞான்றும் தான் கண்டறிந்த) இனிய செயல்களை இடைவிடாது கருதும்'என்று பொருள்கூறி,ஈற்றடியிலுள்ள 'மயலோ' என்பதனோடு இணைத்தலும் ஒன்று. இப்பொருட்கு 'எழுதாக்கற்பு' என்பதைத் தலைமகளென அன்மொழித்தொகையாற் கொள்க.

அள்ளூர் நன்முல்லையார்] 157 [மருதம்

*முந்நாட்பிரிவுக்கு ஏதுவான பூப்பெய்திய தலைமகள் அவ்விடையீட்டைக்குறித்து வருந்திக் கூறியது.*

குக்கூ வென்றது கோழி; அதனெதிர்
துட்கென் றற்றென் றூஉ நெஞ்சம்,
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றா லெனவே.

(உரை). 'கொக்கொக்கோ' என்று சேவற்கோழி கத்தியது; அதைக் கேட்டவுடன் எனது தோளை மருவிக் கூடுங்காதலரைப் பிரிக்கும் வாள்போன்ற கொடிய விடியற்காலம் வந்துவிட்டதே என்று எனது தூயநெஞ்சம் அஞ்சி நடுங்கியது.

துட்கென்றற்று - துட்கென்றது; துட்கெனல், - துண்ணெனல், அஞ்சி நடுங்குதல். 'துட்கென யாவரும் நடுங்க,' 'நெஞ்சுதுட்கென' என்பன சிந்தாமணி (937, 2059)

ஔவையார்] 158 [முல்லை

*போர்வயிற் பிரிந்த தலைமகன் வருவதாகக் குறித்துச் சென்ற கார்ப்பருவ முதிர்ச்சிக்கண்ணும் வரக்காணாது வருந்திய தலைமகள் மேகத்தை நோக்கிக் கூறியது.*

நெடுவரை மருங்கிற் பாம்புபட இடிக்குங்
கடுவிசை யுருமின் கழறுகுர லளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை,
ஆரளி யிலையோ? நீயே பேரிசை
இமையமுந் துளக்கும் பண்பினை;
துணையிலர், அளியர், பெண்டிரிஃ தெவனே.

(உரை). நீண்ட மலையினிடத்துப் பாம்பும் இறந்துபடும்படி மிக்க விசையோடு இடிக்கும் இடியின் முழங்கு குரலோடு கூடிக்காற்றுடன் வந்த நிறைந்த கருவைக்கொண்ட கரிய மேகமே, உன்னிடத்து நிரம்பிய இரக்கமென்பது இல்லையோ? நீயோ புகழ் மிகுந்த இமையமலையையும் அசையச்செய்யும் ஆற்றலுடையாய்; நாங்களோ துணையற்றவரும், எளியருமாகிய பெண்பாலார்; எம்மிடத்து உன் வலிமையையும் கொடுமையையும் இவ்வாறு காட்டுதல் என்ன பெருமையுடைத்து?

உரும் - உருமு, இடி. கழறுகுரல் - முழக்கம், கர்ச்சனை. கால் - வாடைக்காற்று. கமஞ்சூல்-நிறைந்த கருப்பம். மழை - மேகம்; அண்மைவிளி. அளி - இரக்கம், தயை. 'இமையமும்......இஃதெவனே' என்றது, மெலியாரை நலிதல் வலியார்க்கு அழகோ, என்றவாறும். கார்கால முதிர்ச்சிக்கண் பெருங்காற்றோடு மழைபெய்தலை

தழையிலை வாழை முழுமுத லசைய
இன்னா வாடையும் அலைக்கும்;
என்னா குவென்கொல் அளியென் யானே-(ஐங்.460)

என்பதா லறிக.

வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் } 159 [குறிஞ்சி

*மணப்பருவம் எய்தியதால் தலைமகள் வீட்டினுள்ளே செறித்துவைக்கப்பட்ட செய்தியைச் சிறைப்புறத்தானாகிய தலைமகன் உணருமாறு தோழி சொல்லியது.*

தழையணி யல்குல் தாங்கல் செல்லா;
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் லாகம் நிறைய வீங்கிக்
கொம்மை வெம்முலை செப்புட னெதிரின;
யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னும்
அவல நெஞ்சமொ டுசாவாக்
கவலைமாக் கட்டிப் பேதை யூரே.

(உரை). அல்குல் தழையாலாகிய ஆடையைத் தாங்கமாட்டாதாயிற்று; நுண்ணிய சிறிய இடுப்புக்குத் தீங்காகத்திரண்ட விருப்பத்தையெழுப்பும் முலைகள் அழகிய மெல்லிய மார்பிடமுழுதும் நிறையும்படி பரந்து பருத்துச் செப்புக்கு நேராயின; இனிப் பூங்குழையாளுக்குத் தக்க நாயகன் எவ்விடத்து நேர்வான்கொல், என்று கவலையுற்றவராய் ஒருவரையொருவர் கேட்காமல் செயலற்ற உள்ளத்தினராயிருக்கும் அறிவிலாமாக்களை உடைத்தாயிருக்கின்றது இந்தப் பேதையூர்.



...அல்குல், முலை இவற்றின் வளர்ச்சியால் மகள் பேதைப் பருவங்கடந்து மங்கைப்பருவம் எய்தியதை அன்னை முதலியோர் உணர்ந்தார் என்க. நுழை-நுண்மை. (சூடா-நிகண்டு-8, 11). எதிரின - ஒத்தன. மாக்கட்டு - மாக்களது, மாக்களையுடையது. 'அவலக்கவலை நெஞ்சமொடு உசாவாமாக்கட்டு' எனக் கூட்டுக.

மதுரை மருதன் இளநாகனார் } 160 [முல்லை

*வாடையொடு கூடிய தண்பனிப்பருவத்தும் வாராத தலைமகனை நினைந்து ஆற்றாது வருந்திய தலைமகள் 'சொன்னபடி அவர் வந்திடுவார்; நீ ஆற்றியிரு' என்று தன்னை வற்புறுத்திய தோழிக்குச் சொல்லியது.*

நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்;
இஃதோ, தோழி, நங் காதலர் வரவே.

(உரை). நெருப்பையொக்கச் செவந்த உச்சிக்கொண்டையையுடைய அன்றிற்சேவல் இறாமீனைப்போல வளைந்த வாயையுடைய பெண்ணன்றிலோடுகூடி (பனைமரத்தின்) வளைந்த, உயர்ந்த கிளையிடத்துக் கூட்டிலிருந்து துணை பிரிந்து தனித்துள்ளார் செயலற்றழியும்படி கூவும் நள்ளென்ற நடுராத்திரியில், இந்தப் பெரிய குளிர்ந்த வாடை வீசும் கூதிர்ப்பருவத்தும் வந்திலர். கார்காலம் வந்ததும் வருவாரெனச்சொல்லி என்னை நீதேற்றிய நங் காதலர் வரவு இதுதானோ, தோழி?

இறவு - இறா (மீன்). கொடுவாய்; கொடுமை - வளைவு. தடவு - வளைவு. கட்சி - பறவைக்கூடு, the nest of a bird. நரலும் - ஒலிக்கும், கூவும். அன்றில் ஆணும் பெண்ணுமாய்க் கூடிக் கூவுதலும், பனியொடளாவிய வாடை வீசுதலும், நள்ளிரவும் சேர்ந்து காதலனைப்பிரிந்த தலைமகளை மிகவும் துன்புறுத்தின என்க.

நக்கீரர்] 161 [குறிஞ்சி

*முன்னாள், தாய்துஞ்சாமையாலும் வேறுசில இடையூறுகளாலும் இரவுக்குறிக்கட்சென்று தலைமகனைக் கூடப்பெறாத தலைமகள், மறுநாள் சிறைப்புறத்தே வந்து நின்ற தலைமகன் அதனைக் கேட்குமாறு தோழிக்கு அறிவிப்பாள் போலச் சொல்லியது.*

பொழுது மெல்லின்று ; பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசும் ; அதன்றலைப்
புலிப்பற் றாலிப் புதல்வற் புல்லி
அன்னாய் என்னும் அன்னையும் ; அன்னோ
என்மலைந் தனன்கொல் தானே, தன்மலை
ஆர நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

(உரை). பொழுதும் விளக்கமின்றி இருண்டது; மழையும், பேய்களும் கண்கூசும்படி ஓயாது பெய்கின்றது; இவற்றின்மேலே அன்னையும் புலிப்பல்லைக் கோத்த கழுத்தணி அணிந்த இளமகனைப்புல்லி, அடிக்கடி அம்மா, அம்மா என்று கனவில் அரற்றுகிறாள்; அந்தோ, தன் மலையிலே விளைந்த சந்தனப்பூச்சின் நறுமணம் கமழும் மார்பினனாய் (இரவுக்குறிக்கண்) வந்து மழையால் நனைந்த யானையைப் போல இரவெல்லாம் நின்ற காதலன் என்ன கலக்கமுற்றுத் திகைத்தனனோ?

மெல்லின்று-ஒளிமங்கியது;got dim and dark. கழுது-கழுதும். கண்பனிப்ப - கண்நடுங்க; கண்கூசிமூட. அதன் தலை - அதன் மேல்; at the top of it. குறமகளிர் தம் மக்கள் கழுத்தில் அணியாகவுங் காப்பாகவும் புலியின் பற்களையும் நகங்களையும் வடத்திற் கோத்தணிதல் மரபு; 'இரும் புலியெயிற்றுத்தாலி இடையிடை மனவு கோத்துப், பெரும் புறமலைப்பப் பூண்டாள்' என்பது பெரியபுராணம் (கண்ணப்ப - 9) 'புலிப்பற் கோத்த புலம்பு மணித்தாலி' என்பது அகம் (7). அன்னோ - அந்தோ. என் - எவ்வளவு, எப்படி. ஆரம் - சந்தனம்.

கருவூர்ப் பவுத்திரனார்] 162 [முல்லை

*கார்காலம் வந்தவுடன் வினைமுற்றி மீளுந் தலைமகன் மாலைக்காலத்தில் அரும்பிய முல்லையை நோக்கிச் சொல்லியது.*

கார்புனந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை, வாழியோ முல்லை; நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவல் போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

(உரை). கார்காலம் புனங்களுக்கு உதவிய நீரையுடைய அகன்ற முல்லைவைப்பில், (தொழின்மேல் வெளிச்சென்றவர்)பலரும் தொழிலை முடித்து வீட்டுக்கு மீளும் மாலைநேரத்தில் அரும்பும் இயல்பினையான முல்லையே, நீ நினது சிறிய வெண்மையான அரும்புகளாகிய பற்களைக் கொண்டுள்ளாய்; (அவை எனது காதலியின் பற்களைப் போன்று காட்டலால்) நீ நன்று வாழ்வாயாக; ஆனால் பரிகசித்துச் சிரிப்பதுபோலக் காட்டலாகிய இது, துணைவரைப் பிரிந்து தனித்திரங்குவார் மாட்டுச் செய்யத்தக்கதாமோ ? (தகாதுகாண்.)

புலம் - நிலம்; இங்கே முல்லைநிலம். புல்லென் - புற்கென்ற, ஒளிமங்கிய; growing dusky and dim. முகையின் முறுவல் - முகை முறுவல்; முகையாகிய முறுவல் (பண்புத்தொகை); 'இன்' அல்வழிக்கண் வந்த சாரியை. முறுவல் - பல்; 'முறிமேனி முத்தமுறுவல்' (திருக்குறள் - 1113).

அம்மூவனார்] 163 [நெய்தல்

*காதலன் பிரிவால் கழிபடருற்றுக் கையாறெய்திய தலைமகள் தனது துயரைக் கடலொடு சார்த்தி இரங்கியது.*

யாரணங் குற்றனை கடலே; ஊழி
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழைத் திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

(உரை). கடலே, எவர் பிரிவால் நீ துன்புற்று வருந்துகின்றாய்? மீனைப்பிடித்துண்ணும் சிறிய தலையையுடைய வெள்ளையின் தொகுதி பரந்தாலொத்த கொக்கின் கூட்டத்தையுடைய கானற்பரப்போடு கூடிய அழகிய பெரிய நீர்த்துறையிலுள்ள வெண்மையான பூவைக்கொண்ட தாழையின்மீது ஓயாது வரிசைவரிசையாக நடுநிசியிலும் நீ அலைத்து மோதுகின்றாய்; நினது குரலும் ஓயாமல் கேட்கப்படுகின்றது.

அணங்கு - நோய், துன்பம். ஊழி - வரிசை. திரையலை - திரைத்தலை உடையையா யிருக்கின்றாய். 'கங்குலும்' என்பதை முன்னும் பின்னும் 'திரையலை', 'கேட்கும்' என்ற இரண்டினோடுங் கூட்டுக.

மாங்குடி மருதனார்] 164 [மருதம்

*காதற்பரத்தை, தலைமகளுக்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது.*

*கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு*
*துணர்த்தேன் கொக்கின் தீம்பழங் கதூஉம்*
*தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது*
*தண்பெரும் பௌவ மணங்குக, தோழி,*
*மனையோள் மடமையிற் புலக்கும்;*
*அனையே மகிழ்நற்கியா மாயின மெனினே.*

(உரை). தோழீ, அறியாமையால் மனையாட்டி எம்மை வெறுக்கின்றாள்; மகிழ்நனிடத்து யாமும் அவ்வாறே ஆயினேம் எனின் சூல் முதிர்ந்த இளம் பெண்வாளை மாமரத்தின் திரண்ட கிளையினிடத்துள்ள பழக்குலையில் தேன் பொதிந்த இனிய பழத்தைத் தாவிக்கௌவவும், பழைமை மிக்க வேளிரது குன்றூருக்குக் கிழக்கிலுள்ள குளிர்ந்த பெரிய கடல் எம்மையும் வருத்தியிடுக.

கணை - திரட்சி, பருமை. - 'கணைக்கோட்டு' என்பது கொக்குக்கு அடை. கொக்கு - மாமரம். 'குன்றூர்' குன்றுகளையுடை ஊர்; 'குன்றூர்' என்றோர் ஊருமாம். புலக்கும் - புறங்கூறி வெறுக்கின்றாள்; தன்மனைக்கு வரவிடாது தலைமகனை விலக்குகின்றாளெனத் தலைமகள் தன்னை வெறுத்துப் புறங்கூறினதாகக்கேட்ட காதற்பரத்தை 'மனையாட்டி இனி இவ்வாறு எங்களிடத்துப் புலத்தல்வேண்டா. முடியுமானால் எம்மிடத்திலிருந்து அவனைப் பிரித்துத் தன்வயமாக்கிக் கொள்ளட்டும்; அப்பொழுது தனிமையுற்று யாங்களும் வருந்துவேம்; கடலும் எங்களை வருத்தட்டும்' என்றாள் என்க. அது ஒருபோதும் ஆகாதென்று தம்மைத்தாமே வியந்து பெருமிதத்தாற் கூறியவாறும்.

---

பரணர்] 165 [குறிஞ்சி

*தழையுங் கண்ணியுங் கையுறையாகக்கொண்டு தோழியையுற்றுக் குறையிரந்து பின்னின்ற தலைமகன், அவள் அக் கையுறையை ஏற்காது மறுத்துத் தன்னை அகற்றிய போது தனது நெஞ்சொடு கிளத்தியது.*

*மகிழ்ந்ததன் றலையு நறவுண் டாங்கு*
*விழைந்ததன் றலையும் நீவெய் துற்றனை,*
*அருங்கரை நின்ற உப்போய் சகடம்*
*பெரும்பெயற் றலையவிந் தாங்கிவள்*
*இரும்பல் கூந்த லியலணி கண்டே.*

(உரை). முன்னமே களிப்புற்றவர் அதற்குமேல் நறவையும் உண்டாற்போல, நெஞ்சே, நீ கடத்தற்கரிய கடற்கரையில் உப்பின் பாரத்தை மேன்மேலும் கொண்டு நகரமாட்டாது அழுந்தி நின்ற சகடம், பெரிய மழையினிடைப்பட்டு உப்பெல்லாம் கரைந்தழியப்பெற்றாற்போல, இவளது கரிய பலவாகிய (செறிந்த) கூந்தலின் இயற்கையழகையும் செயற்கை யலங்காரத்தையுங் கண்டு, அவ்விடம்விட்டுப் பெயரமாட்டாது நின்று, முன்னிருந்த விருப்பமன்றி, அதன் மேலும் வெவ்விய காமமுற்றாய்.

உப்பு ஓய் சகடம் - உப்பின் பெரும் பாரத்தால் ஓய்ந்து போன வண்டி. இயல் - கருமை, நெறிப்பு, செறிவு, நீளமாகிய இயற்கை யழகு; அணி - தைலப்பூச்சு, மணமூட்டல், பூச்சூட்டல், முடி கொண்டை சுருள் குழல் பனிச்சையென ஐவகையாக முடித்தல் முதலிய செயற்கையழகு. 'கூந்தலியலணிகண்டே' என்றது அவ்விடம் விட்டகன்று தன்தோழியுடன் செல்லுந் தலைமகளின் பின்னழகைக்கண்டு அவன் வியந்து கூறியதாம். உப்புப்பாரம் சால மிகுத்துப்பெய்த சகடம் தான் அச்சிறுவதுமன்றிப் பெருமழையால் உப்புமழியப்பெற்றாற்போல, கழிபெருங்காதலுற்ற நெஞ்சம் தானிறுவதன்றி அதனையும் இழக்கலாகும் என்றாலும். உவமானத்தில் 'அருங்கரை' உவமேயத்தில் தோழியுடன் தலைமகள் கிளிகடிந்து காத்திருந்த தினைப்புனத்தின் அயற்பக்கம்; 'உப்பு', காதல்; 'சகடம்', நெஞ்சு; 'பெரும்பெயல்', தலைமகளின் தந்தையுந் தமையன்மாரும் அறிந்தபோது மூண்டெழுஞ் சினம்.

கூடலூர் கிழார்] 166 [நெய்தல்

*இற்செறிக்கப்பட்ட தலைமகளின் காப்புமிகுத்திக்கண் தனித்துவருந்திய தலைமகளுக்குத் தோழி உரைத்தது.*

*தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை*
*நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்*
*ஊரோ நன்றுமன், மாநகை;*
*ஒருதனி வைகிற் புலம்பா கின்றே.*

(உரை). அழகிய பல்வரிசையை உடையவளே, குளிர்ந்த கடலிலெழும் அலைகள் அப்புறப்படுத்தலால் வெண்மையான சிறகுகளையுடைய நாரைத்திரள் பெயர்ந்து சென்று நீர்த்துறைகளில் அயிரை மீன்களை உண்ணும் ஊரும் நன்றே; எனினும், (காதலனைப்) பிரிந்து தனித்துறையின் துயர் தருவதாகும்.

பறை - சிறகு. அயிரை - ஒருவகைச்சிறுமீன்; 'அயிலை' எனவும் படும். (அகம், 60, 70).

இறைச்சி:—கடலில் ஆரல், இறால் முதலிய பெருமீன்களை உண்ணப்பெறாது அலையால் துரத்தப்பட்ட நாரை மருதநிலத்துச் சென்று நீர்த்துறையிலுள்ள சிறிய அயிரை மீன்களை உண்ணுமாறு, பகற்குறிக்கண் தலைமகளைக் கூடப்பெறாது பல இடையூறுகளால் விலக்குண்ட தலைமகன் இரவுக்குறிக்கண்ணேனும் வந்து அவளைக் கூடப்பெற்றிலனே என்று அவனிலையையும், அதனால் தலைவி படுந் துயரையும் குறித்துத் தோழி இரங்கிக் கூறியவாறும்.

---

கூடலூர் கிழார்] 167 [முல்லை

*தலைமகளைத் தலைமகன் வரைந்துகொண்ட பின்னர் அவள் தலைமகனதூரின்கண் இல்லகத்திருந்து மனையறம் புரியும் மாண்பைச் செவிலித்தாய் சென்று கண்டுவந்து நற்றாய்க் குரைத்தது.*

*முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
*குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்*
*தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவ னுண்டலின்*
*நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகமே*

(உரை). காய்ச்சி(த்தோய்த்த) தயிரைப் பிசைந்த காந்தள்மலர்போன்ற தன் கைவிரல்களைக் கழுவாது (மாசறக்) கழுவுற்றசீலையை உடுத்திக்கொண்டு குவளைபோன்ற தனது மைதீற்றிய கண்களிலே தாளிப்பின் நறுமணங்கமழும் புகை புகுந்து வருத்தத் தானே தன்கையால் துழாவிச் சமைத்த இனிய புளிக்குழம்பை இனிப்பாயிருக்கின்றதென்று புகழ்ந்து தன் கணவன் உண்டதினாலே உள்ளம் மிக மகிழ்ந்தது, உன்னுடைய மகளின் முகம். (இதனை நான் கண்டுவந்தேன்.)

முளிதயிர் - பாலை நன்றாய்க் காய்ச்சித் தோய்த்த தயிர்; முளிதல் - காய்தல். காந்தள் மெல்விரல் - ஐந்திதழ்களாக விரிந்த செங்காந்தள்மலர் ஐந்துவிரல்களோடு கூடிய அங்கைக்குவமை. குய் - தாளிப்பு, கறி குழம்புமுதலியவற்றுக்குக் கூட்டுந் தாளிப்பு. அட்ட - சமைத்த. பாகர் - பாகு, குழம்பு. (அர்-ஈற்றுப் போலி). நுண்ணிதின் மகிழ்தலாவது, தனது உவகையை வெளிக்காட்டாது உள்ளத்தினுள்ளே அடக்கிக்கொள்வது. ஒண்ணுதல் - (அன்மொழித் தொகை) ஒள்ளிய நுதலினை உடையாள்; மகள்.

நேரம் ஆய்விடுமோ என்று தயிர்பிசைந்த கையையுங் கழுவாது உடையை உடுத்திக்கொண்டு அடுக்களை புகுந்து, கண்ணிலே புகை சூழ்ந்து வருத்துவதையும் பாராது தானே தன்கையால் தன் கணவனுக்குகந்த உணவுகளைச் சமைத்து இனிதூட்டுகின்றாள் என்று, அடுதற்றொழிலில் அவளுக்குள்ள ஊக்கத்தையும், கணவனிடத்துள்ள அவளதார்வத்தையும் செவிலி நற்றாய்க்கு வியந்துரைத்தாள் என்க.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[689-வது பக்கத் தொடர்ச்சி]

### 2-ம் பத்து 2-ம் தசகம்

1-ம் பாசுரம்

*திண்ணன்வீடு முதல்முழுதுமாய்*
*எண்ணின்மீதியன் எம்பெருமான்*
*மண்ணும்விண்ணு மெல்லாம்உடனுண்டநம்*
*கண்ணன்கண்ணல்லது இல்லையோர்கண்ணே.*

**பதக்குறிப்புகள்:**—திண்ணன் - கீழ் சொல்லப் புகுவது நிச்சயம். (அதாவது)வீடுமுதல்-மோக்ஷம் முதல், முழுதுமாய் - எல்லாமாய், எண்ணின் மீதியன்-மனதால்நினைத்து முடிவுகாணக் கூடாதவன், எம்பெருமான் - எனக்கு ஸ்வாமி. மண்ணும் - நிலத்தையும், விண்ணும் - ஆகாயத்தையும், எல்லாம் - முற்றுமுள்ளவைகள் எல்லாவற்றையும், உடனுண்ட - பிரளய காலத்தில் ஒக்க விழுங்கிய, (அதாவது வயிற்றிலே வைத்து ரக்ஷித்த), நம்கண்ணன்-நம்முடைய கிருஷ்ண ஸ்வாமி, அல்லது - அல்லாமல், ஓர் கண் - வெறொரு திருஷ்டி, அதாவது ஸர்வ நிர்வாஹகன், இல்லை.

பொழிப்புரை:—மோக்ஷ புருஷார்த்தத்தைப் பக்தர்களுக்குக் கொடுப்பவனாய், நம்மால் அளவிட்டு அறியக்கூடாததாய கல்யாணகுணங்களை யுடையவனாய் எனக்கு ஸ்வாமியாய், ஸர்வாத்மாக்களையும் யுகப்பிரளயத்திலும் ரக்ஷித்துக்காத்த ஸ்ரீகிருஷ்ணபகவான்தான் இந்த ஜகத்துக்கெல்லாம் ஈசன். இதில் யாதொரு ஐயமுமில்லை.

குறிப்பு:—முதல்பத்து முதல் திருவாய்மொழியிலேயே திருமாலுக்குப் பரத்துவம் சொல்லியாயிருக்க இங்கே மறுபடியும் அதைச் சொல்லுவானேனெனில், அங்குச் சொல்லியது ஸ்ரீமந் நாராயணனையென்றும் இங்குக் கூறவந்தது, அவன் பரம்பொருளாயிருந்தாலும் மனிதனாய்க் கிருஷ்ணனென அவதரித்து ஸர்வவித சக்திகளும் வாய்ந்த பௌருஷமிருந்தும் மனிதஜாதியனாய்ச் சுலபனாயிராநின்றதை அருளிச்செய்ய வேண்டுமென்று ஆழ்வார் கருதினாரென்றும், அறிக. இந்த 2-ம் பத்து நூறு பாட்டுக்களும் பகவான் அடையும் பொருளென்றும், அவன் விலக்ஷணவஸ்துவென்றும், பக்தர்கள் மனதாலனைக்கான நிரம்ப இன்பம் பயக்கக் கூடிய ஒண்பொருளென்றும், கற்பிக்க நிற்பன. இந்தத் தசகம், முதலில் கிருஷ்ணாவதாரமெடுத்துத் தன்னைச் சுலபனாக்காட்டிய பரம்பொருளை அதன் அவதாரசேஷ்டிதங்களைக் கொண்டு மனதால் அனைவித்துக்கொள்ளுங்கோளென்று கற்பிக்கின்றது. எளிமையும் பரத்துவமும் சேராச்சேர்த்தி ஆயினும் இவை இரண்டும் பகவானிடத்தில் உளவாயிருப்பனவென்று இத்தசக முதல் பாசுரத்தில் பரத்துவம் மாத்திரம் எடுத்துக் கூறப்பட்டதென் றறிக.

---

2-ம் பாசுரம்

*ஏபாவம்பரமே ஏழுலகும்*
*ஈபாவம்செய்து அருளால்அளிப்பரார்*
*மாபாவம்விட அரற்குபிச்சைபெய்*
*கோபாலகோளரி ஏறன்றியே.*

**பதவுரை:**—மா - மஹத்தான, பாவம்விட - பிரம்மஹத்தி பாவம் விட்டுப்போகும்படி, அரற்கு-பரமசிவனுக்கு, பிச்சைபெய் - பிச்சையைக் கொடுத்தவனான, கோபால கோள்அரி ஏறு அன்றியே - கோபாலனாகிய பராக்கிரமசாலியான ஆண்வலிம்ஹமாகிய கிருஷ்ணபகவானல்லாமல், ஏழுலகும்-ஏழு உலகங்களையும், ஈபாவம் செய்து- பாபங்களைப் போகச்செய்து, அருளால்-கிருபையால், அளிப்பார் - இரக்ஷிப்பவர், ஆர் - எவர் இருக்கிறார்கள்? ஏ - ஐயோ பாவம். வெகு பிரகாரங்களால் உத்கிருஷ்டரான பரமசிவனுக்குங் கூட ஹரி ரக்ஷகனாக விருக்க இதை வற்புறுத்திச் சொல்லவேண்டுமா? இஜ் ஜகத்துக்கு ஹரியைத் தவிர ரக்ஷகர்தானுண்டோ? பரமே - அவனது குணானுபவம் பெறுவதைவிட்டு இது விஷயத்தில் உலகத்தாருக்கு ரக்ஷகன் யாரென்று சுட்டிக்காட்டவேண்டி வருகிறதே இது என்ன கடைமை என்று வெறுத்தபடி.

---

3-ம் பாசுரம்

*ஏறனைப்பூவனை பூமகள்தன்னை*
*வேறின்றிவிண்தொழத் தன்னுள்வைத்து*
*மேல்தன்னைமீதிட நிமிர்ந்துமண்கொண்ட*
*மால்தனில்மிக்கும்ஓர் தேவுமுளதே.*

பொழிப்புரை:—"அயர்வறு மமரர்கள் தன்னுடைய ஸௌசீல்ய குணத்தைக்கண்டு தொழுகைக்காக ஸர்வேசுவரியான திருமகளோடொக்கத் தன் ஸங்கல்பத்தால் சிருஷ்டித்த பிரமாவுக்கும் மஹேசுவரனுக்கும் தன்னை யாச்ரியமாகக் கொடுத்துக்கொண்டிருக்கையாலும், ஸர்வ லோகங்களும் திருவடிகளினுள்ளே யடங்கும்படியான ஆளுகையாலும், இவனே ஸர்வேசுவரன், மற்றொருவரில்லை என்றார்"—ஆறாயிரப்படி.

---

4-ம் பாசுரம்.

*தேவும்எப் பொருளும்படைக்க*
*பூவில்நான் முகனைப்படைத்த*
*தேவன்எம் பெருமானுக்கல்லால்*
*பூவும்பூசனையும் தகுமே.*

பொழிப்புரை:—தேவஜாதியையும் ஸகல பதார்த்தங்களையும் சிருஷ்டி செய்வதற்காகத் தம் நாபிக்கமலத்தில் சதுர்முகனை உண்டாக்கினவனான திவ்விய தேஜோன்மயமான வடிவழகையுடைய எம்பெருமானுக்கல்லால் பூஜையும் புஷ்பஅலங்காரமும் தகுமோ, என்கிறார்.

குறிப்பு:—"தேவன்" என்றால் தேஜோவிசிஷ்டமான ஸௌந்தரியத்தை யுடையவன் என்பது பொருள். அழகு பொருந்தியவரையே பெண்கள் ஆசைப்பட்டு அவருக்கு மாலையிட்டுமணப்பதுபோல் ஸர்வ ஸௌந்தரியமுள்ள பகவானுக்கே பூவும் மாலையும் தகும், என்பது கருத்து.

---

5-ம் பாசுரம்

*தகும்சீர்த்தன் தனிமுதலினுள்ளே*
*மிகுந்தேவும்எப் பொருளும்படைக்க*
*தகும்கோலத்தாமரைக் கண்ணனெம்மான்*
*மிகுஞ்சோதி மேலறிவார்யவரே.*

**அவதாரிகை:**—முன்பாசுரத்தில் சொன்ன பகவானின் திவ்விய ஸௌந்தரியத்தின் ஈடுபாட்டினால் அதை விஸ்தரிக்கிறார்.

பொழிப்புரை:—"தன்னுடைய திவ்வியாத்ம சுவரூபத்துக்குத் தக்க கல்யாண குணங்களையுடையவனாய்த் தன் ஸங்கல்பத்தாலே நியமித்த ஜகத்தையுடையவனாய்த் தன் ஸர்வேசுவரத்துக்கு உசிதமான அழகிய திருக்கண்களை யுடையவனாயிருந்த எம்பெருமானுடைய திவ்விய திருமேனியின் அழகு ஒருவருக்கு நினைக்க வியலுமோ வென்கிறார்"—ஆறாயிரப்படி.

---

6-ம் பாசுரம்.

*பவரும்யாவையு மெல்லாப்பொருளும்*
*கவர்வின்றித்தன்னு ளொடுங்கநின்ற*
*பவர்கொள்ஞான வெள்ளச்சுடர்மூர்த்தி*
*அவரெம்மாழியம் பள்ளியாரே.*

அவதாரிகை:—தாம் இப்பத்தில் உபக்கிரமித்த ஸர்வேசுவரத்துவத்தைத் திரும்பியும் எடுத்து உரைக்கின்றார்.

பொழிப்புரை:—தனக்குள்ளே ஒரு சிறு பக்கத்திலே வைக்கப்பட்ட ஸர்வ ஜகத்தையுடையவனாய்ப் பாற்கடலில் பள்ளிகொள்ளும் துவாரகாநாதனாகிய ஸ்ரீ கிருஷ்ணனே ஸர்வேசுவரன் என்கிறார்.

குறிப்பு:—பகவானின் ஸங்கல்ப ஞானத்துக்கு ஸர்வஜகத்து நிர்வாஹமும் ஒரு அல்பகாரியமென்று உரைக்கிறார்.

---

7-ம் பாசுரம்.

*பள்ளியாலிலை ஏழுலகும்கொள்ளும்*
*வள்ளல்வல்வயிற் றப்பெருமான்*
*உள்ளுளார்அறிவார் அவன்தன்*
*கள்ளமாய மனக்கருத்தே.*

குறிப்புகள் :—மனக்கருத்தென்பது மனஸால் ஸங்கல்பிக்கப்படும் ஆச்சரியமான உலகசிருஷ்டி முதலான வியாபாரங்கள். ஆலிலையில் யுகமுடிவில் பள்ளி கொள்வதை விடுத்தது, சொத்துடையவன் அதைப் பிரளயம் முதலான விபத்துக்களினின்றும் காக்கப் பாத்யப்பட்டவன் என்று திருவுள்ளத்தால் கூறியது.

பொழிப்புரை:—ஸர்வலோகங்களையுமுடையவனாய் அவைகளைப் பிரளயகாலத்தில் தன்திருவயிற்றிலே யடக்கிவைத்துக்கொண்டு ஆல் இலையில் பள்ளி கொள்ளும் மஹோதரப் பெருமானின் உள்ளுறை கருத்தையும், அவனின் திவ்வியசக்திக்கு ஏற்ற அவன் திருவுள்ளத்தின் ஆச்சரியமான திவ்விய சக்திகளையும் ஒருவரால் அறியக்கூடுமோ ?

---

8-ம் பாசுரம்.

*கருத்தில்தேவும் எல்லாப்பொருளும்*
*வருத்தித்தமாயப் பிரானையன்றியாரே*
*திருத்தித்திண்ணிலை மூவுலகும்தம்முள்*
*ளிருத்திக்காக்கும் இயல்வினரே.*

அவதாரிகை:— படைப்பதும் காப்பதும் வெவ்வேறு காரியங்களன்றோ என்றால்—படைத்தவனே காப்பது தாயானவள் பிள்ளையை வளர்ப்பதுபோன்றவொரு கடைமை என்று காட்டுகிறார் இப்பாசுரத்தில்.

---

9-ம் பாசுரம்

*கள்வாஎம்மையு மேழுலகும்நின்*
*னுள்ளேதோற்றிய இறைவஎன்று*
*வெள்ளெறன்நான்முகன் இந்திரன்வானவர்*
*புள்ளூர்திகழல் பணிந்துஏத்துவரே.*

அவதாரிகை:—முன்பாசுரங்களில்சிருஷ்டியும் காப்பும் பரமபுருஷனின் காரியமென்றார். சிவபெருமான் அவனின் அநுக்கிரஹநிமித்தம் ஸேவை செய்வதால் ஜகத்தின் ஸம்ஹாரமும் அவனின் ஆதீனமென்று இப்பாசுரத்தில் ஸூசிப்பிக்கிறார்.

பொழிப்புரை:—இவ்வண்ணம் சதுர்முகனும் சிவபெருமானும் மூன்றுலோக அதிபதியான இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் அப்பெருமானைத் தொழுது ஏத்துவதால் அவர்கள் செய்கையும் அவர்கள் உரையும் புகழாகும்.

---

11-ம் பாசுரம்.

*ஏத்தஏழுலகும் கொண்டகோலக்*
*கூத்தனைக் குருகூர்ச் சடகோபன்சொல்*
*வாய்த்தஆயிரத்துள் இவைபத்துடன்*
*ஏத்தவல்லவர்க்கு இல்லையோருனமே.*

பொழிப்புரை:—"ஸர்வலோகங்களும் தன்னுடைய விஜயத்தைச்சொல்லிக்கொண்டு நின்றேத்த ஏழுலகங்களும் கொண்டருளின இது தொடக்கமாயுள்ள திவ்வியசேஷ்டிதங்களாலே எம்பெருமானுடைய ஸர்வேசுவரத்துவத்தை உரைத்த இந்தத் திருவாய்மொழியை இந்த மனோபாவத்தோடுகூடி ஏத்த வல்லாருக்கு எம்பெருமானுடனே ஒரு நாளும் பிரிவில்லை என்கிறார்" ஆறாயிரப்படி.

இந்தத் தசகத்தில் பகவான் கிருஷ்ணவதாரம்போல் ஜகத்தில் மானிடரூபமாய்த் தோன்றினாலும் பரத்துவமுள்ளவனென்றும், உலகங்களுக்கெல்லாம் சிருஷ்டி ஸம்ஹாரத்தாலே ஈசனென்றும் மஹானான ஆழ்வார் அருளிச்செய்கின்றார்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0) பிரான்சு:

SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS

டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
மதுரை
காஞ்சீபுரம்.




# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50.
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

## :: அருந்தமிழ் நூல்கள் ::

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் தேவாரம் அடங்கன்முறை ... | 7 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் ... ... | 4 | 0 |
| இராமலிங்கசுவாமி திருவருட்பா திருமுறை | 7 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் ... ... | 4 | 0 |
| பட்டினத்தார் பாடல் உரை ... ... | 2 | 0 |
| அருணசல புராணம் „ ... ... | 2 | 0 |
| தாயுமானவர் பாடல் உரை ... ... | 4 | 0 |
| „ மூலம் மட்டும் ... | 1 | 8 |
| திருப்புகழ் மெய்ஞ்ஞான விருத்தியுரை ... | 2 | 0 |
| பாராயணத் திருப்புகழ் ... ... | 2 | 0 |
| விநோதரசமஞ்சரி ... ... | 2 | 8 |
| ஸ்ரீபகவத்கீதை (திராவிட மகா வியாக்யானம் | 3 | 8 |
| „ வசனம் ... ... | 2 | 0 |
| „ (பாகெட் சைஸ்) ... | 1 | 0 |
| நாகம கூளப்ப நாயகன் விறலி விடுதூது | 0 | 12 |
| ஔவை அருந்தமிழ் ... ... | 0 | 12 |

மற்ற எல்லாத் தமிழ்நூல்களும், தேசீய நூல்களும், நாவல்களும், புராணங்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

**கே. எஸ். மணியம் அண்டு கம்பெனி,**
புஸ்தக வியாபாரிகள்,
இராயப்பேட்டை, சென்னை.

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணு 12.

கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.

Estd. **NATIONAL** 1906
**INSURANCE COMPANY LIMITED.**
*Head Office*:-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.*

**R. G. Das & Co,** OR **Mr. T. A. Anantachari** B.A.
*Managers.* *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

# கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி

## பிரசுரங்கள்.

### சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

### கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரெட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினை யுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையமில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையிரேரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

**கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி**
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.




## வர்த்தமானம்

லாகூரில் சட்டமறுப்பு இபக்கத்தில் சேர்ந்து தண்டிக்கப்பட்டவர்களில் 84 பேர் மன்னிப்புக்கேட்டுக் கொண்டதனாலும், இனிக் கவர்ன்மெண்டிற்கு விரோதமான காரியங்களில் தலையிடுவதில்லை என்று உறுதி கூறியதினாலும் விடுதலை செய்யப்பட்டனர் என்று லாகூர்ச் செய்தி கூறுகின்றது.

***

சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஆக்டோபர் மாதம் 6-ந்தேதி முதல் 10-ந்தேதிவரையில் பெங்களூர் தத்துவ ஞான சங்கக் காரியதரிசியான ஸ்ரீமான் கண்டையாவினால், 'விஜயநகரராஜ்யஸ்தாபனமும், வித்யாரண்யரது உதவியும்' என்னும் விஷயம்பற்றிப் பிரசங்கம் செய்யப்படும் என்று தெரிகின்றது.

***

கோயமுத்தூர் கதர் வஸ்திராலயத்தில் சென்றவாரம் ஓரிரவு யாரோ புகுந்து 210ரூபாயைப் பணப்பெட்டியோடு எடுத்துச் சென்றனர் என்றும், காலிப்பெட்டி ஒரு வீட்டிற்கருகில் கிடந்து அகப்பட்டதென்றும், இதுவிஷயம் போலீசாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றதென்றும் கோயமுத்தூர் செய்தி கூறுகின்றது.

***

சமீபத்தில் நடந்த ஐரோப்பிய யுத்தத்தினால் பிரான்ஸ் தேசத்தில் சிறந்த நகரங்கள் 30 அழிந்து போயினவாம். அவைகளை மறுபடியும் அமைப்பது முடியாதுஎன்ற முடிவுசெய்த பிரெஞ்சு கவர்ன்மெண்டார், அந்நகரங்கள் இருந்தவிடங்களில் ஞாபகச் சின்ன ஸ்தம்பங்களை நாட்டத் தீர்மானித்திருக்கின்றனராம். சீக்கிரத்தில் இவ்வேலை துவக்கமாகுமாம்.

***

சென்றவாரம் நாட்டிங்ஹாமில் பிரிட்டிஷ்தொழிற் கட்சியார் காங்கிரஸ் கூடிற்று. இம் மஹாநாட்டில் 30பேர் சேர்ந்துகொண்டு காரியம் நடைபெறுதவாறு குழப்பம் விளைவித்தனர்என்றும்,கடைசியில் அவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர் என்றாலும் மகாநாடு அன்று நடைபெற முடியாது போயிற்றென்றும் தெரிகின்றது. மஹா நாட்டில், காபினட் சபையின் உள்நாட்டு இலாக்கா மந்திரியான R. கிளேஸ் 'நமது காலத்தில் நாம் முற்றிலும் அபேத வாதத்தை ஸ்தாபிக்காது போனாலும் அபேதவாத நோக்கத்திற்கு மாறுபடாதவாறு நாம் இயன்றவரையில் காரியங்கள் செய்திருக்கின்றோம். எனவே அவசரத்தால் ஒன்றும் நடவாது' என்று பேசினாராம்.

***

கெமால் பாஷாவின் கீழுள்ள குடியரசுத் துருக்கியில் பொதுவுடைமைச் சதியாலோசனைக் கோஷ்டி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதன் பயனாக மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் முதலியோருள்பட 30 பேர்கள் இப்பொழுது கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். ஜனசமூகத்தில் பலவகுப்பினரிடையே கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் கிளர்ச்சி செய்ததாகக் கூறப்படுகிறது. கிளர்ச்சிக்காரர்கள் ஸ்தாபனம், ருஷ்யப் பிரசார சபையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. துருக்கியில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமான பொதுவுடைமை ஸ்தாபனம் இதுவேயெனக் காணப்படுகிறது.

சந்தேகத்திற்கிடமான பலர் தனிப்பிரதேசமாகிய அங்கோராவிலும் ஸான்கோல்டாக்கிலும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

***

அமெரிக்காவில் அழகுப் போட்டியொன்று ஜூலை மாத இறுதியில் நடந்ததாம். இப்போட்டியில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ருஷியா, ருமேனியா முதலியநாட்டுமாதர்கள் கலந்து கொண்டனராம். அழகு நிர்ணயக் கமிட்டியார் டிரோதி என்னும் அமெரிக்கப் பெண்ணே மிக அழகுடையவள் என்று முடிவு செய்தனராம். அப்பெண்ணின் வயது 17. அவளது பொன்னிறக் கூந்தலின் நிறை 120 பவுண்டு. அவள் உயரம் 5அடி. மார்பின் சுற்றளவு 34அங்குலம், இடையின் சுற்றளவு 16அங்குலம், தொடையின் சுற்றளவு 21அங்குலம், கணைக்காலின் சுற்றளவு 8அங்குலம் என்று பத்திரிகைகளில் விவரம் வெளியாயிருக்கின்றது. இப்பெண்ணிற்குப் போட்டிக் கமிட்டியார் 2,000 டாலர்களை வெகுமதியாக அளித்தனராம். மற்றொரு அமெரிக்க மாது இரண்டாவது பரிசுபெற்றாள். ருமேனியா நாட்டு மாது ஒருத்தி மூன்றாவது பரிசும், ருஷ்யதேசத்துப் பெண் ஒருத்தி நான்காவது பரிசும் பெற்றார்களாம்.

***

பிரிட்டிஷ் சங்க சாஸ்திரமகாநாட்டில் ஆசிரியர் பவர் தலைமைவகித்துப் பேசுகையில், சென்ற 30வருஷங்களில் கோதுமைப் பஞ்சமேற்பட்டு அதனால் ஜனங்கள்கஷ்டப்படுவதைப் பௌதிகசாஸ்திரம் தடுத்திருப்பதாகக் கூறினார். ஸர்வில்லியம் குரூக்ஸ் சென்ற நூற்றாண்டின் கடைசியில் பேசுகையில் அப்பொழுது உலகில் நடந்த கோதுமை சாகுபடியைக் கொண்டு 1929-ம் வருஷம் வரையில் ஜனத்தொகை அதிகரித்தாலும் போதிய அளவு கோதுமை கிடைக்கக்கூடுமென்று கூறினாரென்றும், சாஸ்திரத்தின் பயனாகப் பஞ்சக் கஷ்டமேற்படாதவாறு தடுக்கக் கூடுமென்று அவர் அப்பொழுதே அறிவித்திருக்கின்றாரென்றும், அவர் எதிர்பார்த்தது இப்பொழுது மிகவும் சரியாகவேயிருக்கின்றதென்றும், செயற்கை எருவினாலும், தாவரசாஸ்திர ஆராய்ச்சிச் சாதனங்களை உபயோகிப்பதனாலும், கொஞ்சமாகக் கோதுமை விளைந்த விடத்தில் அதிகமாகவும், ஒன்றும் விளையாதவிடத்தில் விளைந்தும் அதிக உற்பத்தி யேற்பட்டிருக்கிறதென்றும், தவிர, வடக்கே லாபகரமாகக் கோதுமை விளையக்கூடிய பிரதேசம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதென்றும் ஆசிரியர் பவர் பேசினார் என்று பிரிட்டிஷ் செய்தி கூறுகின்றது.

18.9.20

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா ரூபா 2 0 0
வெளிநாடு ,, ,, 2 8 0
தனிப்பிரதி விலை அணு 0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## தேவதாசிகள்

அமெரிக்க மாது மிஸ் மேயோவால் எழுதப்பட்டது. இந்தியர் பழக்க வழக்கங்களைப்பற்றி எழுதியுள்ளார். படிக்க வேடிக்கை.

முத்தையா புக் டிப்போ,
தபால் பெட்டி 99, சென்னை.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ். மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ 1.4.0 மாதிரி காபி இனும்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!
60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல்
சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)